# தொகுதிவாரியாக மாணவ ஆசிரியர் நியமனம்

Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9.
இதழ் 360
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க கார்த்திகை 13 ஷஃபான் 26 புதன்கிழமை (29-11-67)

## அடுத்தவருட முற்பகுதியில்

யாழ்ப்பாணம், புதன்
1968-ம் ஆண்டு முதல் தவணையில் மாணவ ஆசிரியர்களுக்கு தொகுதிவாரியாக நியமனம் வழங்கப்படுமென்றும், மாணவ ஆசிரிய பரீட்சையில் திறமையாக செய்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை டிசம்பர் மாதக் கடைசியில் நடைபெறுமென்றும் கல்வி அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் கூட்டத்தில் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கேட்ட கேள்வியொன்றிற்கு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழி பாடநூல்கள் பற்றியும் குறிப்பாகத் 'தமிழ் மலர்' நல்ல முறையில் அச்சிடப்படவில்லையெனவும், தமிழ் மொழிபாட நூலுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் தமிழ் சொற்களுக்குபதிலாக சமஸ்கிருத சொற்களை உபயோகித்து வருகின்றாரென்றும் திரு. இரத்தினம் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதாக ஆலோசனை சபை கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பல்கலைக்கழக வகுப்புகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ள சிங்கள பாடநூல்கள் யாவும் தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளனவா என்ற கேள்வியொன்றிற்கு கல்வி வெளியீட்டு ஆணையாளர் திரு. எம். ஏ. பெரேரா

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் அடைமழை

# குளங்கள் நிரம்பி வழிகின்றன

## இரணைமடுக் குளத்திலும் நீர்மட்டம் உயர்கிறது

யாழ்ப்பாணம், புதன்
நேற்றுமுன்தினம் முதல் இங்கு தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாண நகரில் நேற்று மட்டும் 3.45 அங்குல மழை பெய்ததாக அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இரணைமடுக்குளம் 3 அடி நீர் மட்டத்திலிருந்தே 21 அடிக்கு உயர்ந்துள்ளது. இன்னும் 6 அடி மழை பெய்தால் இதன் நீர்மட்டம் நிரம்பிவிடும் என அஞ்சப்படுகின்றது.

கிளிநொச்சியில் அக்கராயன்குளம் நீர்மட்டம் 16 அடியாகவும், கல்மடுக்குள நீர் மட்டம் 13 அடியாகவும் உயர்ந்துள்ளது. முறுகண்டிகுளம், மருதங்குளம், விஸ்வமடுக்குளம் கோட்டைகட்டின குளம் ஆகியவை நிரம்பி, நீர் சுண்டிக்குளம் கடலுக்குப் பாய்ந்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இங்கு மழை பெய்யுமானால் சகல குளங்களும் தண்ணீர் மீறிப்பாயுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் இங்கு பெய்யும் மழையினால் தினசரி சராசரியாக குளங்களின் நீர் மட்டம் 2 அடி உயர்ந்து செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந. நி.]

## 'சம்பளம் உயரவேண்டும்: சுருட்டு தொழிலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்
ரூபா மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள 8000 சுருட்டுத் தொழிலாளர்களின் கூலி உயர்த்தப்படவேண்டுமென இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் பலர் வற்புறுத்தினர்.

தாவடியிலுள்ள சங்கக் காரியாலயத்தில், திரு. இ. தலியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சுருட்டுத்தொழில் சம்பந்தமான சம்பள நிர்ணய சபையைக் கூட்டி சம்பள உயர்வை வற்புறுத்தவேண்டுமென முடிவுசெய்யப்பட்டது.

எல்லாப் பொருட்களின் விலைகளும் உயர்ந்திருப்பதால். சுருட்டுத்தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதாக கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது,

சுருட்டுத் தொழிலாளரின் சம்பள உயர்வு சம்பந்தமாக ஐக்கிய தொழிற் சங்க சம்மேளனத் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை டிசம்பர் 1-ம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பிரதமர் யாழ். விஜயம்

## 1000 பொலிஸார் பாதுகாப்பளிப்பர்

### உள்ளூராட்சி அமைச்சர், உதவி அமைச்சரும் வருவர்

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணம் மாதிரிச் சந்தைக்கான அத்திபாரக் கல்லை நாட்டும் பொருட்டு அடுத்தமாதம் 5-ந் திகதி யாழ்ப்பாணம் வரும் பிரதமர் திரு. டட்லிசேனநாயகாவின் விஜயத்தின்போது இங்கு பலத்த பொலிஸ்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸ் இலாகா ஒழுங்குகள் செய்துள்ளது.

காலை 8 மணிகது விசேஷ விமானத்தில் இங்கு வந்து சேரும் பிரதமர் அன்று பகல் 11 மணிக்கே கொழும்புக்குத் திரும்புவார். 3 மணி நேரம் மட்டும் இங்கு தங்கும் பிரதமருடன் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும், உதவி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவும் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பிரதமர் அழைத்து வரப்படுகையில் வழியில் காங்கேசன்துறை, உடுவில், கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிஎல்லைக்குள், ஒவ்வோர்தொகுதியிலும் ஒவ்வொருவரவேற்பு மட்டும் பிரதமருக்குக் கொடுக்கவடபகுதிபொலிஸ் சுப்பிரின்டன் அனுமதிஅளித்துள்ளார்.

20 மோட்டார் சைக்கிள் பொலிசாரின் பாதுகாப்புடன் பிரதமர்பலாலிவிமான நிலையத்திலிருந்து இங்கு அழைத்து வரபபடுவார். அநுரதபுரம், கண்டி உட்பட தென்னிலங்கையிலிருந்தும் விசேஷ பொலிசார் இங்கு அழைக்கப்பட்டுள்ளனர். சுமார் 1000 பொலிசார்பாதுகாப்பிற்காக இங்கு வந்து சேருவார்களென எதிர்பார்க்கப் படுகின்றது.

அன்றுகாலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிச் சந்தியிலிருந்துபிரதமர் ஊர்வலமாக மாதிரிச்சந்தைக்கான இடம்வரை அழைத்துச்செல்லப்படுவார். பின்

[8-ம் பக்கம் பார்க்க)

## ரூபாய் மதிப்புக் குறைப்புக்கு பார்லிமெண்ட் அங்கீகாரம்

கொழும்பு, செவ்.
ரூபாவின் மதிப்பை 20 சதவிகிதம் இலங்கை அரசாங்கம் குறைப்பதெனச் செய்துள்ள முடிவை இலங்கை சனப்பிரதிநிதிகள் சபை நேற்றுக் காலை அங்கீகரித்தது.

இதற்கான மசோதா 73—50 வாக்குகள் பெற்று 23 பெரும்பான்மை வாக்குகளால்நிறைவேற்றப்பட்டது.

சபையில், அரசாங்கத்தின் சார்பில் இறுதியாகப்பேசிய நிதிமந்திரி திரு. யு. பி. வன்னிநாயக்க, ரூபாயின்நாணய மதிப்பைக் குறைப்பதென அரசாங்கம் முடிவு செய்தது ஒரு தனிப்பட்ட வகுப்பினருக்கு நன்மைதேடித் தரவல்லவென்றும், நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தை அபிவிருத்தியடையச் செய்யவேயென்றும் கூறினர்.

சர்வதேச நிதி ஸ்தாபனம் உலக வங்கி ஆகிய இரண்டிலும் இலங்கை ஓர் அங்கத்துவ நாடாக இருக்கிறது என்றும், ஆகவேதான் அவற்றிடமிருந்து இலங்கை அரசாங்கம் ஆலோசனை கேட்டிருந்ததாகவும் நிதிமந்திரி,

(8-ம் பக்கம் பார்க்க)

1. யானை மார்க் நம்பர் 1 சிமென்ஸ
ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சிமென்ஸ்.
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25

2. சிமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணையும் ஆமணக்கெண்ணை கூந்தல் வளரும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்
தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநிசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-35
6 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-25
இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சிமென்ஸ் பற்பொடி: தினமும் சிமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.
ஒரு பாக்கெட் 60 சதம்.

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:
சிமென்ஸ் கடுக்காய் குளிகைகள்
இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1/20, தபால் செலவு 60 சதம்.

சிமென் பிரதர்ஸ்,
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விற்பனைக்கு

வீடுகள்:

(1) யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் சமீபத்தில் 5 பெரிய வசதியான அறைகள் கொண்ட வீடு 4 பரப்பு (நில. பர.) வளவு அரசடி வீதியிலும், (2) 4 அறை வீடு 2 பரப்பு 5 குழி (நில. பர) வளவு யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் கே. கே. எஸ். வீதியிலும் உள்ளன. விபரங்களுக்கு இல. 2154 மே. பா. ஈழநாடு.

2154


## பஸ்ஸில் மீன் மணக்கிறதாம்

புலோலி, செவ்வாய்

பருத்தித்துறையிலிருந்து மந்திகை ஊடாக நாகர்கோயிலுக்குச்செல்லும் பஸ்களில் பிரயாணம் செய்யும் நாகர்கோயில் மக்களுக்கு மேலும் ஒரு பிரச்னை புதிதாகத் தோன்றியுள்ளது.

பஸ்களில் மீன்பெட்டிகள் இப்போது கொண்டுசெல்லப்படுவதே புதிய பிரச்னையாகும்.

தினமும் காலையில் பருத்தித்துறையிலிருந்துமந்திகை ஊடாக நாகர்கோயில்வரை செல்லும் மீன்காரர்கள் பஸ்ஸில் ஏறித் தங்களுக்கு வசதியான இடங்களைப் பிடித்துக்கொள்வதுடன் அவர்களுடைய மீன்பெட்டிகளையும் பஸ்ஸினுள்ளேயே வைத்துவிடுகின்றனராம். மீன்பெட்டிகளால் பஸ்வண்டிகள் அசுத்தம் அடைவதோடு மீன் நாற்றமும் பிரயாணிகளுக்குத் தொல்லை தருவதாயிருக்கிறதாம்.

## தெய்வாதீனமாக தப்பினர்

சங்கானை, செவ்.

வலிகாமம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவு சமாஜத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று நேற்று சங்கரத்தை- வட்டுக்கோட்டை வீதியில் வந்துகொண்டிருக்கையில் குடைசாய்ந்தது. பாரத்துடன் வந்த இந்த லொறியிலிருந்த எவரும் தெய்வாதீனமாக காயமெதுவுமின்றித் தப்பினர்.

### கட்டணம் உயர்வு

புன்னாலைக்கட்டுவன், செவ்.

நாணய மதிப்புக் குறைப்பைத் தொடர்ந்து பெட்ரோல் விலை கூடியுள்ளதால் வான்காரரும், தனிப்பட்ட கார்காரரும் தமது கட்டணத்தை உயர்த்தியுள்ளனர். அத்துடன் முட்டை, அரிசி ஆகிய பொருட்களின் விலையும் ஏறியுள்ளது.

## ஐக்கியம் என்று சொல்லி 'தமிழ்நாடு' அமைக்க முயற்சியாம்

### ஒரு பௌத்தபிக்கு கூறுகிறார்

காலி, செவ்.

'இந்த நாட்டில் வாழும் சமூகங்களுக்கிடையில் தாம் ஐக்கியத்தை ஏற்படுத்த வழி வகுத்து விட்டதாக தேசிய அரசாங்கம் சொல்லிக் கொள்கிறது. ஆனால் இது உண்மையல்ல. பதவியிலிருப்பதற்காக சிங்கள மக்களின் உரிமைகளை இந்த அரசாங்கம் தியாகம் செய்து விட்டது.

இவ்வாறு நெலுவசாகி குணநந்த நாயகதேரோ காலியில் நடைபெற்ற கெப்பிட்டிப்போலா ஞாபக தினக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

வண. பத்தேகம விமலவன்ச நாயகதேரோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் குணநந்த நாயக தேரோ தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே ஐக்கிம் இருப்பதாகவிருந்தால்திருக்கோணமலை தேசிய மயமாக்கப்பட்டதை சமஷ்டிக் கட்சியினர் எதிர்க்க வேண்டிய அவசியமில்லையே.

சிங்கள உத்தியோகஸ்தர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு செல்வதை அவர்கள் எதிர்க்கிறார்கள். எமக்கு காணிகள் வழங்கப்படக்கூடாது என அவர்கள் கோருகிறார்கள்.

தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்காக தமிழர்கள் அரசாங்கத்தில் இருக்கவில்லை. தமிழ் நாடு உருவாக்குவதற்காகவே அவர்கள் தமது பதவிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

### ஒப்பந்தம் பாதிக்கும்

தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயகா பேசுகையில் கூறியதாவது:

1815-ம் வருடத்தில் செய்யப்பட்ட ஒப்பந்தம் இப்போதும் சிங்களவர்களைப் பாதித்து வருகிறது. 1966-ம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்த மசோதா அமுலும் அடுத்த பொதுத் தேர்தலில் சிங்கள மக்களைப் பாதிக்கும். இப்போது சிங்கள மக்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் 21 தொகுதிகள் தமிழர்களுக்குப் போய்விடும் மற்ற 72 தொகுதிகளிலும் அங்கத்தவர் தெரிவு தமிழர் கையிலேயே தங்கியிருக்கும்.

முன் எப்போதையும் விட இப்போது தேசிய தலைவர்களின் தேவை அதிகரித்து விட்டதாகவும் திரு. ஆர். ஜி. மேலும் கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் காலி மேயர் திரு அபுகுணவர்தன தேசிய கொடியை ஏற்றிவைத்தார்.

## ஏற்றுமதி கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை மலையாளம் புகையிலை ஏற்றுமதியாளர் சங்கத்தினர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சிகரட் புகையிலையை ஏற்றுமதி செய்ய எடுத்துக் கொண்ட முயற்சி இலங்கை நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதால் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டதாகத் தெரிகின்றது. (ந. நி

## அண்ணன் கொலை; தம்பி கைது

காலி, செவ்.

இளைய சகோதரரால் இருதடவை பலமாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் 7 பிள்ளைகளின் தந்தையும் அக்மீமன பொலிஸ் பகுதியைச் சேர்ந்தவருமான டி. வி. சந்திரதாசா (35) என்பவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வழியில் மரணமானார்,

இதுசம்பந்தமாக அக்மீமன பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் அசோகா சமரக்கோன் சந்திரதாசாவின் இளைய சகோதரரான அமரதாசா, அதே ஊரை சேர்ந்தடபிள்யுரூமீயல், எல். என். உபசேன ஆகியோரை காலி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தபோது உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்திரேட் திரு. றெக்ஸ் விக்கிரமசிங்கா மூவரையும் டிசம்பர் மாதம் 4-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஸ்தல விசாரணையின் போது சாட்சியமளித்த அக்மீமன பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இகல தீம்பியாகிராமசேவகர் திரு. ஏ. கே. ஜயலத் தமதுவீட்டுக்குக் காலம் சென்றவர் பலத்த காயங்களுடன் வந்து தமது இளைய சகோதரர் அமரதாதா, ரூமீயல், உபசேன ஆகியோர் தம்மை வாள்களால் தாக்கியதாகத் தெரிவித்தார் எனவும் அச்சமயத்தில் மேற்படி மூவரும் தமது (கிராமசேவகர்) வீட்டுக்கு வந்து சந்திரதாசாவைத் தாம் கொலைசெய்யப்போவதாகப் பயமுறுத்தி அல்லாவிடில்தமது (கிராம சேவகர்) வீட்டுக்கு எறிகுண்டு வீசப்போவதாகவும் எச்சரித்ததாகக் கூறினார்.

தமது வீட்டில் வைத்தும் சந்திரதாசா அமரதாசாவினால் வாளால் வெட்டப்பட்டதாகவும் கிராமசேவகர் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

## 3 வருட கடூழிய சிறை

காலி, செவ்.

பலத்தாராவைச் சேர்ந்த வி. கே. கிரிகோரிஸ் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக எம். ஏ. ஜோன் அல்லது ஜோன் மகாத்மயா என்பவருக்கு நீதியரசர் திரு. வி. தென்னக்கூன் மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்,

### மட்டுவிலில் நாளை பிரசாரக்கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

தீண்டாமை ஒழிப்புப் பிரசாரக் கூட்டம் மட்டுவிலில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தடியில் நாளை மாலை திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. என். சண்முகதாசன், திரு. ஹிக்கொட தர்மசேன, டாக்டர் எஸ். வி. சீனிவாசகம், திரு. எம். அந்தனிசில் மற்றும் பலர் உரைநிகழ்த்துவர்.

நுணவில் சந்தியிலிருந்து நாளை பிற்பகல் ஊர்வலம் ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை வந்தடையும்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



### சங்கானைப் பட்டினசபை கேள்விப்பத்திர விளம்பரம்

10-12-67-ம் திகதி காலை 10-00 மணிவரை கீழே சொல்லப்பட்ட வேலைக்கான சீல்வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 5/-ம் கேள்விப்பத்திர வைப்புப் பணமாகரூபா 50/-ம் கட்டியதன் பேரில் வழங்கப்படுகின்ற கேள்விப் பத்திரத்திலேயே கேள்விகள் கேட்கப்பட வேண்டும். கேள்விப்பத்திரப்பணம ரூபா 5/- திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. 8-12-67-ந் திகதி காலை 10-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

மேற்கொண்டு விபரங்களை வேலை நேரங்களில் சங்கானைப்பட்டினசபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வேலைகள்

1 சங்கானைச்சநதை திருத்தவேலை.

ஒப்பம்:
சி. க.- திருச்சிற்றம்பலம்
தலைவர்
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபைக்காரியாலயம்,
சங்கானை, 27-11-1967
ச. கு. 341


### கேரளத்துக்கு 10,000 தொன் அரிசி தமிழகம் அனுப்பும்

சென்னை, நவ 28

கேரளத்துக்கு 10,000 தொன் அரிசி அனுப்புவதற்குச் சென்னை அரசாங்கம் சம்மதித்துள்ளது. ஏற்கனவே கேரளத்துக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள 35,000 தொன்னைத் தவிர இத்தொகை கூடுதலாக அனுப்பப்படவிருக்கிறது.

மத்திய அரசின் வேண்டுகோளுக் கிணங்கவே இந்த 10,000 தொன் அரிசியும் கேரளத்துக்கு கொடுக்கப்படுகிறது.


ராதா மணிமார்க்

# சந்தனுதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட்.
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்"
160, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068



### மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Arch hall, Jr,
Jack Lester, Melissa Morgan
in
DEADWOOD'76

### நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
அன்பே வா

### REGAL JAFFNA
Daily at
4-40, 7-00 & 9-45 P.M.
Tom Tryon-
Senta Berger
in
THE GLORY GUYS



குதூகல ஆரம்பம்

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | பிளாஸா [கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |

மொடேர்ன்
[பண்டாரவளை]

தினசரி பி.ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

சந்திரபாபு—சாவித்திரி
மனோகர்—கே.ஆர். விஜயா
ஏ.வி.எம்.ராஜன்--விஜயஸ்ரீ
ஃப்ரண்ட்சோமு
ஆகியோர் நடித்த

# தட்டுங்கள் திறக்கப்படும்

திரைக்கதை, டைரக்ஷன்: ஜே. பி. சந்திரபாபு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. வில் சீனாவை அனுமதிக்கும் தீர்மானம் இம்முறையும் தோல்வியடையலாம்

நியூயோர்க், நவ. 28

சீனாவை ஐ. நா. சபையில் அனுமதிப்பது பற்றிய தீர்மானம், ஐ நா. பொதுச் சபையில் 6 நாட்களாக விவாதிக்கப்பட்டது. நேற்றுடன், விவாதம் முடிவடைந்தது. இன்று, தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

சீனாவை ஐ. நா.வில் அனுமதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை அல்பேனியாவும், மற்றும் 11 நாடுகளும் சபையில் சமர்ப்பித்திருந்தன.

இத்தீர்மானத்தின் மீது பேசுகையில், ஆபிரிக்க நாடுகளில் சீனா அனாவசியமாகக் குறுக்கிட்டுக் குழப்பம் விளைவிப்பதாக நைஜர் நாட்டுப் பிரதிநிதி குற்றஞ்சாட்டினார் சீனாவின் குறுக்கீட்டினால் தமது நாடு மூன்று தடவை பாதிக்கப் பட்டதாகவும் அவர் கூறினார் மாணவர்களை தேசத்துரோக நடவடிக்கைகளுக்குச் சீனா தூண்டுவதாக அவர் குறிப்பிட்டு, இத்தகைய நடவடிக்கைகளின் அடிப்படையில், ஐ. நா.வின் அனுமதி பெறுவதற்குச் சீனாவுக்குத் தகுதி கிடையாது என்று கூறினார்.

சீனாவுக்கு ஐ. நா'வில் இடமளிப்பது பற்றிய தீர்மானம் ஐ. நா. பொதுச் சபையில் பெரும்பாலும் தோல்வியேயடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 'பினங்கு கலவரங்களுக்கு சீனாவே காரணம்'

### மலேஷிய துணைப்பிரதமர்

கோலாலம்பூர், நவ. 28

மேற்கு மலேஷியத்தீவான பெனாங்கில், அண்மையில் நடைபெற்றகலவரங்களுக்கு சீனாவின் தூண்டுதலே காரணமாகுமென மலேஷிய உதவிப் பிரதமர் திரு. துன் அப்துல் ரஸாக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பினாங்கிலுள்ள சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயமொன்றிலிருந்து பொலிசாரால் கைப்பற்றப் பட்ட சில துண்டுப்பிரசுரங்களை அவர் பத்திரிகையாளரிடம் காண்பித்தார். அப்பிரசுரங்கள், மக்களைக் கலவரங்களுக்குத் தூண்டிவிடும் வகையில் அமைந்திருந்தது டன், மலேஷியப் பிரதமர் திரு. துங் அப்துல் ரஹ்மானின் மரணத்தையும் வேண்டியிருந்தன. பொலிசாரால் கைப்பற்றப்பட்ட சில ஆயுதங்களையும் அவர் காண்பித்தார்.

இந்தக் கட்சியின் நோக்கம் கலவரங்களை உண்டாக்குவதே என்பது தெளிவு என மலேஷிய உதவிப் பிரதமர் குறிப்பிட்டார்.

பெனாங்கில் இப்போது நிலைமை கட்டுக்கடங்கியுள்ளதெனினும் அமைதியின்மை இன்னும் நீங்கவில்லை. பொலிசாரும் இராணுவத்தினரும் ரோந்து சுற்றிவருகின்றனர்

## சென்னை மிருகக்காட்சி சாலையில் குழந்தைகள் ரயில் பாதை

### அண்ணா அடிக்கல் நாட்டினார்

சென்னை, நவ. 28

சென்னை மிருகக் காட்சிச் சாலையில் குழந்தைகளுக்கான ரயில் பாதை ஒன்றுக்குத் தமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரை அடிக்கல் நாட்டினார்.

இந்த ரயில் பாதை மிருகக் காட்சிச்சாலையிலிருந்து நேரு ஸ்டேடியம் வரை, 1 1/2 மைல் தூரம் நீளமானதாகும்.

ரயில் பாதையை, ரூ. 5லட்சம் செலவில் சென்னை நகராட்சி மன்றம் அமைக்கவிருக்கிறது.

உத்தேச குழந்தைகள் ரயிலின் என்ஜின், இங்கிலாந்தில் செய்யப்பட்டுவரும். பெட்டிகள் உள்ளூரிலேயே தயாரிக்கப்படும் இந்தரயிலில் 100 குழந்தைகள் பிரயாணம் செய்யலாம்.

---

௯0 லட்சம்

### குழந்தைகள் பிறப்பது தடை செய்யப்பட்டது

புனா, நவ. 28

அதிகாரபூர்வமாகவும், இதர விதிகளிலும் கருத்தடைசெய்துகொண்டவர்களின் எண்ணிக்கை இதுவரையிலும் சுமார் 30 லட்சமிருக்கும் என்று இந்திய மத்திய சுகாதார குடும்பக் கட்டுப்பாடு மந்திரி டாக்டர் எஸ். சந்திரசேகர் இங்கு கூறினார்.

அதாவது, அடுத்த பத்தாண்டுகளில் 90 லட்சம் குழந்தைகள் பிறப்பது தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று அவர் விளக்கம் கூறினார்.

''இது குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் சாதனையாகும்'' என்று அவர் குறிப்பிட்டார்.

### யூ. எஸ். ஸ்தானிகர் தமிழில் பேசினார்

சிதம்பரம், நவ. 28

தமிழகத்திலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. அல்பேர்ட் பிராங்க்லினுக்கு சிதம்பரம் நகரசபை ஒரு வரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுத்தது. திரு. பிராங்க்லின் தமிழில் பதில் கூறினார்.

நகரசபை ஆரம்பப்பள்ளியைத் திறந்துவைத்துப் பேசுகையில், திரு. பிராங்க்லின் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''அறியாமையை ஒழித்தால்தான் எந்த நாடும் முன்னேற முடியும். குடும்பக்கட்டுப்பாடு அவசியம். பெற்றோர்கள் தமது குழந்தைகள் நல்வாழ்வு வாழ்வதற்குக் குடும்பக் கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டியது அவசியம்.''

---

மே வங்காள

### புதிய முதல் மந்திரிக்கு காங்கிரஸ் ஆதரவு

கல்கத்தா, நவ. 28

மேற்கு வங்காள முதல் மந்திரி டாக்டர் பி. ஸி. கோஷுக்குப் பூரண ஒத்துழைப்பும், ஆதரவும் அளிப்பதென நேற்று இங்கு கூடிய காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரிக் கமிட்டிக் கூட்டம் முடிவுசெய்தது.

இதற்கிடையில் ஒருகுண்டு வெடிப்பைத் தொடர்ந்து, மூன்று இடங்களில் இன்று காலை தொடங்கி [illegible]குச்சட்டம் அ[illegible]டிருக்கிறது.

முன்னாள்

### மே. பாகிஸ்தான் கவர்னர்

### சொந்த மகனால் சுட்டுக் கொலை

ராவல்பிண்டி, நவ. 28

முன்னாள் மேற்குப் பாகிஸ்தான் கவர்னராக நவாப் அமீர்முகம்மது கான் ராவல்பிண்டியிலிருந்து 150 மைல் தொலைவிலுள்ள தமது சொந்தப்பட்டினமான கலபாக்கில் வைத்து, அவரது சொந்த மகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1966-ம் ஆண்டு ஒக்டோபரில், பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுடன் சில அபிப்பிராயபேதங்களை முன்னிட்டுப் பதவியிலிருந்து அவர் ராஜினாமாச் செய்யும் வரை, நவாப் முகம்மது கான், அயூப்கானின வலது கரமாகக்கருதப்பட்டார்.

தந்தைக்கும் மகனுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதமொன்றின்போது முன்னாள் கவர்னர் அவரது மகன் அஸதுல்லாவினால் சுடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நவாப்தான் முதலில்சுட்டு மகனைக் காயப்படுத்தியதாகவும், மகன் திருப்பிச்சுட்டபோது நவாப் உடன் கொல்லப்பட்டார் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## அமெரிக்க இறக்குமதிகள்

### தீர்வை குறையும்

வாஷிங்டன், நவ. 28

அடுத்த வருடம் ஜனவரி 1ந் திகதியிலிருந்து அமெரிக்காவினுள் இறக்குமதியாகும் பொருட்களின் இறக்குமதித்தீர்வைகளைக் குறைப்பதென அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் அறிவித்துள்ளார்.

கென்னடி சுற்றுப்பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட உடன்பாட்டுக்கிசையவே ஜோன்சன் இவ்வாறு அறிவித்துள்ளார்.

---

சைப்பிரஸ்

### மக்காரியோஸ் சம்மதம்

நிக்கோஸியா, நவ. 28

சைப்பிரஸிலிருந்து கிரேக்க துருப்புகளை வெளியேற்றுவதற்குத்தாம்இணங்குவதாக சைப்பிரஸ் ஜனாதிபதி திரு. மக்காரியோஸ் ஐ. நா. விசேஷ பிரதிநிதி திரு. ஜெபேட் பென்னெட்டிடம் தெரிவித்துள்ளார்.

சைப்பிரஸிலிருந்து சைப்பிரியரல்லாத துருப்புகள் யாவும் விலகவேண்டும் என்றும் ஐ. நா. துருப்புகள் மட்டுமே அங்கு இருக்க வேண்டுமென்றும் துருக்கி வலியுறுத்தி வந்துள்ளது.

---

### 'ஜனத்தொகை பற்றி அச்சம் வேண்டாம்'

தேசாய் கூறுகிறார்

ஜெய்ப்பூர், நவ. 28

நாட்டில் ஜனத்தொகை பெருகி வருவது குறித்து அஞ்சவேண்டியதில்லை என்று இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினார்.

ராஜஸ்தான் வர்த்தக சபை விழா ஒன்றில் அவர் பேசுகையில், நாட்டுள் [illegible] இல்லாத வரை ஜனத்தொகை ஒரு சுமையாக இருக்கும் என்றும், வசதிகள் அதிகரித்தும், ஜனத்தொகை ஒரு நல்ல சொத்தாக விளங்கும் என்றும் அவர் சொன்னார்.

ஜனத்தொகை வளர்ச்சியைத் தடுக்க அரசினர் உஷாராக இருந்துவந்தால் கூட, பலனிருக்க முடியாது என்று திரு. தேசாய் சிரிப்புக்கிடையே கூறினார்.

### பளையில் ஐ. நா. தினம்

யாழ்ப்பாணம், புதன்

''ஜனநாயக முறையின் உச்சிப்பீடம் ஐக்கிய நாடுகள் சபையே. இலங்கையில் ஜனநாயகம் முறையாக நிலைநாட்டப்படுவதானால் ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தின் அம்சங்களை இலங்கை வாழ் மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதோடு பரிபாலனத்திலும் நடைமுறையிலும் அதனை அனுஷ்டிக்கவேண்டும்.''

பளையில் நடைபெற்ற ஐக்கியநாடுகள் தினக் கூட்டத்தில் பேசுகையில் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி கருணைநிலைய அதிபரான செல்வி அச்சின்ஸ் பேசுகையில், இலங்கையில் வேலைக்காரப் பிள்ளைகளை வீடுகளில் வைத்திருக்கும் பழக்கம் அதிகமாகவுள்ளதென்றும், அப்பிள்ளைகளை ஜீவகாருண்யத்தோடு வளர்ப்பதுமிகக்குறைவென்றும். அவ்வேலைக்காரப் பிள்ளைகளின் கல்வி, பழக்கவழக்கங்கள்சரியாககண்காணிக்கப்படுவதில்லையென்றும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பிரகடனத்துக்கு இது முரண்பாடானதென்றும் குறிப்பிட்டார்.

பண்டிதர் செ. சேனாதிராசா, பண்டிதர் ஞானப்பிரகாசம் ஆகியோரும்பேசினார்கள். போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. முருகேசம்பிள்ளை பரிசில்கள்வழங்கினார். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [ந. நி.]

---

### ஏடன்

ஏடன், நவ. 28

ஏடனிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ்பெறுவது இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது.

அடுத்த வியாழக்கிழமை தென் அரபிய சமஷ்டிக்கு சுதந்திரம் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

---

மனைவியை

### விவாகரத்துசெய்தவன் அவளையும் மூவரையும் கொலை செய்தான்

பெய்ரூட், நவ. 28

வட லெபனானிலுள்ள திருப்போலியில், தான் விவாகரத்துச் செய்துள்ள தனது மனைவியின் வீட்டுக்குச் சென்று, அப்பெண்ணின் தாய், தந்தை, சகோதரன், மூவரையும், அப்பெண்ணையும் ஒரு மனிதன் சுட்டுக் கொலை செய்ததாகப்பொலிசார் அறிவித்தனர்.

பொலிஸ்அறிக்கைகளின்படி, 35 வயதான அம்மனிதன் தனது 19 வயதான மனைவியை ஒருவருடத்துக்கு முன் விவாகரத்துச் செய்திருந்தானாம். ஆனால், அவர்களின் பெண் குழந்தையைப் பராமரிப்பது பற்றி அவர்கள் இருவரிடையேயும் தகராறு இருந்து வந்ததாம்.



கேரளத்தில்

### மாசேதுங் படங்கள்

கோழிக்கோடு, நவ. 28

''சீன கம்யூனிஸ்ட் தலைவரான மாசேதுங்கை, உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சிறந்த தலைவர் என்று இடதுசாரி கம்யூனிஸ்ட்கட்சி கருதுகிறது. எனினும் கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் சீனத் தலைவரைப் பாராட்டி மாசேதுங்கின் படங்களும் சுவரொட்டிகளும் காணப்பட்டதற்கும் என்னுடைய கட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை'' என்று கேரள இடதுசாரி கம்யூனிஸ்ட் மந்திரி இம்பிச்சி பாவா பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

---

### ''எவ்வித பாக்கியுமில்லை''

சங்கானை, செவ்வாய்

மின்சார இலாகாவிற்கு சங்கானைப் பட்டினசபை சார்பில் எந்த விதமான பாக்கியும் செலுத்தப்பட வேண்டியதில்லையென்றும், செலுத்த வேண்டிய தொகைகள் மின்சார இலாகாவின் மின்சாரப் பட்டியல் சபைக்குக் கிடைத்த ஒரு நாட்களுக்குள்ளேயே இதுகாலவரை செலுத்தப்பட்டு வந்தனவென்றும் எந்தஒரு தொகையையும் பாக்கிப் பணமாக நிலுவை நிற்க இடமளிக்கவில்லையென்றும் சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசிக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார விநியோகத்திற்கான தொகைகளை உள்ளூராட்சி மன்றங்கள் சரிவரச் செலுத்தவில்லையென்றும் இதனால் மின்சார இலாகா உள்ளூராட்சி அமைச்சுக்குப் பலத்த புகார் செய்துள்ளதாகவும் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்ளூர் ஆட்சி அமைச்சு சிரேஷ்ட உதவிச் செயலாளர் சுற்று நிருபம் அனுப்பியிருந்ததைத் தொடர்ந்தே இவ்விதம் அறிவிக்கப்பட்டது.

---

### மாணவர்கள் பிடுங்கினர்

கொடிகாமம், செவ்வாய்

மீசாலைப்பகுதிவயல்களில் மீசாலை வீரசிங்க வித்தியாசாலை மாணவ மாணவிகள் களை பிடுங்கினர்.

மீசாலை வடக்கு கிராம சேவகர் திரு. சி. அம்பலவாணபிள்ளை இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். தலைமைஆசிரியர் திரு. எஸ். பதஞ்சலி, மற்றும் ஆசிரியர்களும், மாணவர்களுடன் சென்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஜனநாயகத்தின், நமது சுதந்திரத்தின் ஆணி வேர், தெய்வத்தின் பால் நமக்குள்ள நம்பிக்கை தான். அந்த வேரை வெட்டிவிட்டால், ஜனநாயகம், சுதந்திரம் என்ற மலர்கள் வாடிச் செத்துவிடும்.

—ஒலி ஜோன்கிராம்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்க ஸ்ரீ கார்த்திகைமீ 13 உ (29-11-67)

## நல்ல முயற்சி

ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள விலைவாசிஉயர்வையும் வாழ்க்கைச்செலவுப் பிரச்னையையும் ஓரளவு சமாளிப்பதற்கு அரசாங்க ஊழியரின் 'அலவன்ஸ்' இடைக்கால ஏற்பாடாக அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்துதனியார்துறை ஊழியர்மத்தியல் சலசலப்பு ஏற்பட்டிருக்கிறது இதில் தவறு சொல்ல இடமில்லை.

வாழ்க்கைச்செலவு உயர்வு அரசாங்க ஊழியருக்கு மட்டுமல்ல. இலவச பிரயாணவசதி மற்றும் பல வசதிகளும் அரசாங்க ஊழியருக்கு உண்டு. தனியார் துறை ஊழியருக்கு வசதிகள் மிகமிகக்குறைவு ரூபாய் மதிப்பைக்குறைக்க அரசாங்கம் தீர்மானித்தபோது அரசாங்க ஊழியரின் 'அலவன்ஸை' அதிகரிக்கவும் முடிவுசெய்தது. தனியார்துறை ஊழியர் பற்றி அது சிந்திக்கத் தவறிவிட்டது. இது பெரும் குறை. எந்த நிலைமையையும்தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பவாதிகளுக்கும், கட்சி அரசியல் சந்தர்ப்ப வாதிகளுக்கும்அரசாங்கம்வாய்ப்பளித்துமிருக்கிறது. பொதுவேலைநிறுத்தமொன்றுக்கு ஆயத்தங்கள் நடைபெறுவதற்கும் இதுதான் காரணம்.

தொழில் அதிபர்களையும் தோட்ட முதலாளிமார்களையும் தொழில் அமைச்சர் சந்தித்துப் பேசியிருக்கிறார். தோட்ட முதலாளிமார் சம்மேளனம், இலங்கை முதலாளிமார்சம்மேளனம், தேசிய, வர்த்தக வங்கிகள் பிரதிநிதிகள் ஆகியோரைத் தொழில்அமைச்சர்சந்தித்துப்பேசியிருக்கிறார். தேசிய நலனைக்கருதி தனியார்துறை ஊழியருக்கு சம்பள உயர்வளிக்குமாறு அவர் கேட்டுள்ளாராம். தொழிலாளர்சங்கப்பிரதிநிதிகளையும் அமைச்சர் சந்தித்துப் பேசுகிறார்.

அமைச்சரின் இந்த நல்ல முயற்சி வெற்றி பெறவேண்டும். நாட்டின் நலன் கருதி முதலாளி — தொழிலாளி நல்லுறவும் ஒத்துழைப்பும் வலுப் பெறவேண்டும். பேச்சு வார்த்தைகள் நீடித்துப் போகாமல் துரிதமாக ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியம்.

## சிறைத்தண்டனை

பதுக்கல், கொள்ளை இலாபம் ஆகிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு இனிச் சிறைத்தண்டனை கிடைக்கும்.

''வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி'' என்ற மனப்பான்மையுடன், நெருக்கடியான சந்தர்ப்பங்களைத் தமக்குச் சாதகமாக்கி திடீர்ப் பணக்காரராகிவிட நினைக்கும் வர்த்தகர்களுக்கு மன்னிப்பு வழங்கமுடியாது. வர்த்தகர்கள் எல்லோருமே மோசமானவர்கள் என்று சொல்லிவிடமுடியாது. ஒரு சிலர் செய்யும் தவறு எல்லோர் மீதும் பழியைப் போடக் காரணமாகிறது. எனவே வர்த்தகர்களே தமக்குள் கட்டுப்பாடு விதித்துக்கொள்வதுவர்த்தக சமூகத்தின் மதிப்பை காப்பாற்றிக் கொள்ள உதவும்.

வர்த்தகர்களுக்கும் பல குறைகளும் கஷ்டங்களும் இருக்கக்கூடும். அவர்களின் ஒற்றுமையும் கட்டுப்பாடுமே இதற்கு நிவாரணம் தேடித்தரமுடியும்.

பதுக்கல், கொள்ளை இலாபத்துக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படுவது வரவேற்கவேண்டியதே. ஆனல் பதுக்கல் கொள்ளை இலாபத்தைக் கண்டுபிடிக்கும் அதிகாரிகள் தமது கடமையையும் பொறுப்பையும் சரிவரச் செய்யவேண்டும். லஞ்ச ஊழல் புகார்களுக்கு இடமளிக்கக்கூடாது என்பதை சுட்டிக்காட்டவிரும்புகிறோம்,

### சமாதானத்துக்கு அணுசக்தி

#### இந்தியா - மே ஜேர்மனி ஒத்துழைப்பு

புதுடில்லி, நவ.26

அணுசக்தியை சமாதான நோக்கங்களுக்கு பயன்படுத்தும் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவும் மேற்கு ஜெர்மனியும் அணுசக்தி விஞ்ஞானிகளைப் பரிமாறிக் கொள்ளவிருக்கின்றன.

இப்பரிமாறல் திட்டத்தின் கீழ் முதலில் இரண்டு இந்திய விஞ்ஞானிகள் மேற்கு ஜெர்மனிக்கு செல்லவிருக்கின்றனர்.

இன்று

### மீன் விலையை அதிகரிக்க ஆலோசனை

யாழ்ப்பாணம், புதன்

நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மீன்விலையை அதிகரிக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்க இன்று மாலை யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர்களின்கூட்டமொன்று நடைபெறவிருக்கிறது.

எல்லாப் பொருட்களின் விலைகளும் அதிகரித்திருக்கும்பொழுது மீன்விலை மட்டும் உயராததால், கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைச்செலவு அதிகரித்திருப்பதாகவும், இதனாலேயே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

# தானும் வளர்ந்து [...] உதவும் யூகோஸ்லா[...]

நான் யூகோஸ்லாவியாவிற்கு 1950-ம் ஆண்டு சென்றபொழுது, அது ஒரு பின்தங்கிய நாடாகவே விளங்கியது. அக்காலத்தில் நல்லதோர் தீப்பெட்டியைத்தன்னும் வாங்கமுடியாதிருந்தது. நான் அங்கு வீற்றிருந்த காலத்தில், ஒரு வருடமும் இருமாதங்களும் தொழிலபிவிருத்தியை நாடுவதற்கான திட்டங்களைத் தீட்டி சோஷலிஸ எல்லையை அடைய முற்பட்டனர் யூகோஸ்லாவிய மக்கள். இன்று தமது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்த நாளிலிருந்து 24 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. இக்கால எல்லைக்குள் அவர்கள் ஈட்டிய வெற்றிகளைக் குறிப்பிடுவதாயின், பின்தங்கிய நாடு எனக் குறிப்பிட முடியாத அளவிற்கு முன்னேறியுள்ளது.

#### நாடெங்கும் தொழில்மயம்

யுத்தகாலத்திற்கு முன் யூகோஸ்லாவியா ஒரு விவசாய நாடாக இருந்தது. ஏறக்குறைய 55 வீதத்தவர் விவசாயிகளாக இருந்தனர். இன்று 20 வீதத்தவரே விவசாயிகளாவர்! அதாவது ஏறக்குறைய 55 வீதத்தவர் தொழிற்சாலைகளில் கடமையாற்றுகின்றனர் என்றல் யுத்தமுடிவின் பின்னர் எத்தனை தொழிற்சாலைகளை அமைத்துள்ளனர் என யூகித்துக்கொள்ளலாம்.

இவ்வாறு தொழிற்சாலைகள் ஒருபுறம் அதிகரிக்க விவசாயத்தொழில் உற்பத்தியில் கூடுதலான இயந்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. இதனுலும் உற்பத்தி முறையை விருத்தி செய்ததினுலும்விவசாயப்பொருள் உற்பத்தி பன்மடங்காக அதிகரித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் பொருளாதார சபையினல் தயாரிக்கப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து நோக்கும்பொழுது பொருள் உற்பத்தியும், தொழிலாளரது சராசரி வருமானமும், அவர்களது வாழ்க்கைத் தராதரமும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் பார்க்கக் கூடுதலாக உயர்ந்துள்ளன.

#### இலங்கைக்கும் உதவியது

யூகோஸ்லாவியா - இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகட்குக் கடன் உதவி அளித்துள்ளது. 1963-ம் ஆண்டு 50 இலட்சம் டொலர் பெறுமதியான கடன் கொடுத்தது. இவ்வாறு கடன்கொடுத்து உதவுவதுடன் யூகோஸ்லாவிய பொருள் உற்பத்தி ஸ்தாபனங்கள் எகிப்து, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பல்வேறு திட்டங்களைக் கட்டிக்கொடுத்துள்ளன.

இலங்கையின் மீன்பிடித் தொழிலை விருத்தி செய்வதற்கு உதவியாக இருக்கின்ற 'டிரோலர்' எனப்படும் 5 மீன்பிடிக் கப்பல்களை யூகோஸ்லாவியாவே உருவாக்கியது. அத்துடன் துரிதவேகத்தில் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் செய்துமுடிக்கும் நோக்குடன் மஸ்கெலியாஓயா நீர்வீழ்ச்சித் திட்டத்தை இங்கிரா என்னும் ஸ்தாபனமே செய்கின்றது. இவ்[...] 22 [...] பொருளாதாரத்தை அபி

### யூகோஸ்லாவியாவின் தேசியதினம் இன்று கொண்டாடப்படுகிறது.

விருத்தியடையச் செய்ததுடன் இலங்கைபோன்ற பின்தங்கிய நாடுகளுக்கு உதவக்கூடிய அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

#### சோஷலிசம் - எல்லை

யூகோஸ்லாவியா ஹிட்லரின ஆட்சியை எதிர்த்துப் போராடிய காலத்திலேயே தம்நாட்டில் சோஷலிஷத்தைக் கட்டி வளர்க்கவேண்டுமெனத் திட்டமிட்டனர் இவ்வெல்லையை அடையும் பொருட்டு திட்டமிட்ட பொருளாதாரத் தினடிப்படையில் முன்னேறினர் இவ்வெல்லையை அடைய முற்பட்ட பொழுது, யூகோஸ்லாவியாவின் கொள்கைகளை நிராகரித்த ஸ்டாலின் சீற்றங்கொண்டு அந்நாட்டிற்கு அளித்த உதவியையும் வாபஸ்பெற்ருர். 'இதனல் எதிர்பாராதகஷ்டங்கள் எழுந்தன. இருப்பினும் குறிக்கோளை தவற விடவில்லை.

5 வருடப் பொருளாதாரத் திட்டங்களை எந்தனையோ கஷ்டங்கட்குள் நிறைவேற்றியதன் பயனக யூகோஸ்லாவியா தொழில் வளர்ச்சியடைந்த நாடாக மிளிர்கின்றது, திட்டத்தின் அடிப்படையில் பொருளபிவிருத்தியடைவது வேறு சோஷலிஸ எல்லையை அடைப்பது வேறு

நம்நாட்டில் நானும் ஒரு சோஷலிஸ்ட் எனக் கூறுவோர் பலர் அவர்கள் அர்த்தம் தெரியாமல் கூறுகின்றனர். சோஷலிஸ நாட்டின் உற்பத்தி சாதனங்கள் பொதுச்சொத்தாக இருப்பதுடன் அவை உற்பத்தி செயப்படுபவராலேயே நிர்வகிக்கப்பட வேண்டும் இவ்வடிப்படையிலேசய யூகோஸ்லாவியா சோஷலிஷத்தை நோக்கி முன்னேறுகிறது.

#### தொழிலாளர் நிர்வகிக்கும் நாடு

யூகோஸ்லாவியா சோவியத் யூனியனுக்குப் பின்னரே தம்நாட்டில் [...] தைக் கட்டிவள[...] பட்டது. இருப்[...] கோஷ்லேவியா [...] யூனியனிலும் பா[...] னதாக ஒவ்வொ[...] றுற்பத்தி ஸ்தாப[...] கடமையாற்றுகின்[...] லாளரே நிர்வ[...] கள். இலங்கையி[...] ங்க தொழிற்சா[...] வாகம் கூட்டுத்[...] காமிகளிடம் உ[...] ஸ்லாவியாவில் [...]

அ. விசுவ[...]

[...]ரம்தொழிலாளர் [...] இவ்வதிகாரத்தை [...] படுத்தும் முகமா[...] ழிலில் கட[...] தொழிலாளரே [...] வகிக்க வேண்டு[...] யூகோஸ்லேவியா [...] சட்டத்தில் இ[...] ளது.

உற்பத்தி [...] தேசிய மயமாக்[...] படி. நாட்டிற்கு [...] மான தொழில் [...] களை மக்கள் சா[...] றில் கடமையாற்[...] லாளர் நிர்வகிப்[...] டாம்படி. இதன் [...]

# உலகசமாதானமே எங்கள் கொள்[...]

## யூகோ. தேசியதினத்தை யொ[...] இலங்கையிலுள்ள தூதர்செ[...]

### யூகோஸ்லாவியாவின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள யூகோஸ்லாவியத்தூதர் போன் சேர்பனேவிக் விடுத்துள்ள செய்தி இது.

யூகோஸ்லாவியா மக்கள் இன்று தமது 22-வது தேசிய தினத்தைக் கொண்டாடுகிருர்கள் 22 வருடங்களுக்கு முன்புதான் யூகோஸ்லாவியா ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப்பின்பு நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலைத்தொடர்ந்து உருவாகிய சட்ட சபை, முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனநாயக சமஷ்டிக் குடியரசாக யூகோஸ்லாவியாவைப் பிரகடனப்படுத்திற்று.

1941-ம், 42-ம், 43-ம் ஆண்டுகளில், புகழின் உச்சகட்டத்தில் இருந்த ஹிட்லர் யூகோஸ்லாவியாவைக் கைப்பற்றி உருவாக்கிய முடியாட்சியைத் தகர்த்து எறிந்து புதிய சோஷலிஸ ஜனநாயக ஆட்சியை உருவாக்க மார்ஷல் டிட்டோவின் தலைமையில் மக்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். இந்த ஆர்ப்பாட்டங்களில் எல்லா இன யூகோஸ்லாவியா மக்களும் பங்குபற்றினர்.

1945-ம் ஆண்டு இரண்டாவது உலக யுத்தம்முடிவு பெற்றவுடன், யூகோஸ்லாவியா சுதந்திர நாடாகச் [...] ர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது அன்று முதல் யூகோஸ்லாவியா

அமைதியானமுறையில் அபிவிருத்தி அடைந்துவருவதுடன், சோஷலிஸ பொருளாதார முறைகளிலும் அபிவிருத்தி அடைந்து வருகிறது.

யுத்தத்திற்குப் பின்பு யூகோஸ்லாவியாவில் உருவாகிய பிரமாண்டமான அபிவிருத்திக்குக் காரணம், சோஷலிஸ ஜனநாயக பிரமாணங்களை அடிப்படையாகக்கொண்ட சுயநிர்ணய ஆட்சியும், மக்களின் சலியாத உழைப்புமே ஆகும். உற்பத்தி சாதனங்களை தொழிலாளரின் நிர்வாகத்தில் பொறுப்பிகைப்படும் முறை அறிமுகப்படுத்தப் பட்டபின்பே தேசிய வருமானத்தில் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி ஏற்படத் தொடங்கிற்று அதைத் தொடர்ந்து தேசிய வருவாய் இரண்டாவது உலக யுத்த காலத்திலும் பார்க்க மூன்று மடங்காக அதிகரித்துக்கொண்டது.

யூகோஸ்லாவியாவின் பொருளாதாரத்தில் அபிவிருத்தி கைத்தொழில் மயங்களால்தான் அதிகம் பெறக்கூடியதாக இருந்தது யுத்தகாலத்துக்கு முன்பு இங்கே விவசாயத்தில் 75 வீதத்துக்கு மேற்

பட்ட மக்கள் ஈ[...] னர் 1966-ம் [...] கப்பட்ட மதிப்[...] இன்று 47 சத[...] விவசாய உற்பத்[...] பட்டுள்ளனர் [...] கிறது.

உற்பத்திகளைத் [...] படுத்தி, உற்[...] பெருக்குவதே யூ[...] யாவின் முக்கிய[...] விருத்தித்திட்டம[...] வருகிறது.

வெளிநாட்டு [...] பொறுத்தளவில் [...] லாவியா கூட்[...] கொள்கையிலும், [...] சகவாழ்விலும் [...] நம்பிக்கையுடை[...] இருந்துவருகிறது[...]

கூட்டுச்சேராக்[...] யில் யூகோஸ்லா[...] பிக்கை கொண்[...] தான் மத்திய [...] பிரச்னைகளுக்கு [...] வேண்டும் என்று [...] டிட்டோ பரந்த[...] படையில் ராஜ[...] வடிக்கைகளில் ஈ[...] இதன்மூலம் [...] வியா சமா[...] வைத்துள்ள [...] சர்வதேச கூட்டு[...] ஆயுதப்போட்டி [...] நீக்குவதற்கும் [...] நாடு என்பதை உ[...] தெளிவா[...]விட்[...]

யூகோஸ்லாவி[...] நாடுகளுடனும்அ[...] ஒத்துழைப்பை [...] கிறது. உலகசமா[...] நிரந்தரமாக்க [...] வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கும் ...லவியா

...ல் சோஷலிசத் ...ட்டிவளர்க்க முற் ... இருப்பினும் யூ ...வியா சோவியத ...லும் பார்க்க முன் ...வ்வொரு பொரு ...ஸ்தாபனத்திலும் ...ாற்றுகின்ற தொழி ... நிர்வகிக்கின்றனர் ...கையில், அரசா ...ழிற்சாலைகளின் நிர் ...ட்டுத்தாபன அதி ...ம் உண்டு. யூகோ ...ாவில் இவ்வதிகா...

...ற்ற தொழில் விற்பன்னர தும் அரசாங்க அதிகாரிகளி னதுமான சர்வாதிகாரத்தை ஒழிக்கலாம். இவ்வாறு அதி காரிகளது சர்வாதிகார த்தை ஒழிக்க முயல்வதுடன் அரசாங்க அதிகாரத்திலும் தொழிலாளரும் விவசாயி களும் ஈடுபட முயல்வர். இத்தகைய கட்டத்திலேயே யூகோஸ்லாவியா இன்று இருக்கின்றது இந்நாடு வெகு விரைவில் முன்னேறி சோஷ லிஷ சமுதாயத்தை அமை த்து உலகிற்கு வழிகாட்டும் என்று நம்பலாம்.

...விசுவநாதன்

...ிலாளரிடம் உண்டு ...ாரத்தை உறுதிப் ...முகமாக ஒருதொ... கடமையாற்றும் ...ாளரே அதனை நிர் ...வேண்டுமென்ற விதி ...லேவியா அரசியல் ...ில் இடம்பெற்றுள் ...

...ந்தி சாதனங்களை ...மயமாக்குவது முதல் ...ட்டிற்குச் சொந்த ...தாழில் ஸ்தாபனங் ...கள் சார்பாக அவற் ...மையாற்றும் தொழி ...நிர்வகிப்பது இரண ... இதன்மூலம் கல்வி...

# ...ள்கை ...யாட்டி ...செய்தி

...க்கள் ஈடுபட்டிருந்த ...966-ம் ஆண்டு எடுக் ... மதிப்பீட்டின்படி ...47 சத வீத மக்களே ... உற்பத்திகளில் ஈடு ...ளனர் என்று தெரி...

...ந்திகளைத் துரிதப் ... உற்பத்திகளைப் ...வதே யூகோஸ்லாவி ... முக்கியமான அபி ...ந்திட்டமாக இருந்து ...

...நாட்டு உறவுகளைப் ...தளவில் யூகோஸ் ... கூட்டுச்சேராக் ...கயிலும், சமாதான ...விலும் நிறைய ...கயுடைய நாடாக ...ருகிறது.

...ச்சேராக் கொள்கை ...கோஸ்லாவியா நம் ... கொண்டுள்ளதால் ...த்திய கிழக்குப் ...களுக்கு தீர்வுகாண ...ம் என்று மார்ஷல் ... பரந்த அடிப் ...ல் ராஜதந்திர நட ...களில் ஈடுபட்டார். ...லம் யூகோஸ்லா ... சமாதானத்தில் ...ள்ள பற்றையும், ...ச கூட்டுறவு மூலம் ...போட்டி பூசல்களை ...ற்கும் உழைக்கும் ...பதை உலகத்துக்கு ...க்கிவிட்டது.

...ஸ்லாவியா எல்லா ...டனும் அமைதியான ...ட்பை விரும்பு ...லகசமாதானத்தை ...மாக்க உழைத்தும் ...து.

## இன்றைய பலன்

29-11-67

புதன்கிழமை

கார்த்திகை மாதம்

13-ந் திகதி

நட்சத்திரம் - சுவாதி பி இரவு 3-49 மேல் விசாகம்.

திதி - திரயோதசி பி. இ 2-50 மேல் சதுர்த்தசி.

சுபநேரம் - 4-43—6-13

ராகுகாலம்- 12-13—1-43.

மேஷம்- புதுமனை நாட்டம், உறவாடும் உள்ளம்

ரிஷபம்- தூதுவிடு படலம், துன்பத்தில் முடியும்.

மிதுனம்- இசைத்துறை ஆர்வம், குரு விசுவாசம்.

கடகம்- செய்தொழிற் சிறப்பு, ஜெயமுண்டு வாழ்வில்.

சிம்மம்- மறைந்த பொருள் வரவு, மன நிறைவு.

கன்னி- அரசபகை, அவதானம் வேண்டும்.

துலாம்- கருத்தில் வேற்றுமை. கவலை மிகுதி.

விருச்சிகம்- சொற் சிலம்பம், சுவையான நிகழ்ச்சி.

தனுசு- குயில் வேட்டையாடி கோட்டானை பிடிப்பாய்.

மகரம்- தங்கரதம் போல் வருவாள் தவறுது இன்பம் தருவாள்.

கும்பம்- புத்திரர் புகழ் புதுவழி நாட்டம்.

மீனம்- கழுகுப்பார்வை கவனித்து நட.

— சோதிடக் கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## பஸ்சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், புதன் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து பெய்யும் மழையினல், நெடுந்தீவு, புதுக்குடியிருப்பு பஸ் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளன.

நெடுந்தீவு 'லோஞ்ச்' சேவை மழை கடல்கொந்தளிப்பு காரணமாக நிறுத்தப் பட்டிருப்பதால். இதனுடன் தொடர்பான பஸ் சேவையையும் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

புதுக்குடியிருப்பிற்குச் செல்லும் வழிகளிலுள்ள மதவுகளுக்குமேலால் தண்ணீர்பாய்வதால், பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு செல்லும் பிரயாணிகள், கிளிநொச்சிவரை தான் செல்லமுடியும்.

மழைகாரணமாக மற்றும் பல இடங்களில் பஸ் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கமான சில சேவைகள் நிறுத்தப்பட்டதால் பிரயாணிகள் பெரும்கஷ்டமடைந்துள்ளனர்.

ஆசிரியருக்கு கடிதங்கள்

## மார்கழி 3-ம் திகதி திருவாதிரை

எல்லாங் கடந்த பரம்பொருளை, சுபவார, சுப நட்சத்திர, சுபயோக சுப முகூர்த்தத்தில் வழி படுதல் மிகவும் பொருத்தமானதாகும் நடேசரை அபிடேகிக்கவும், வழிபடவும் ஒரு வருடத்தில் மூன்று நட்சத்திரங்களும், மூன்று திகதிகளும் வருகின்றன. சித்திரை மாதம்திருவோண நட்சத்திரத்திலும், ஆனி மாதம் உத்தர நட்சத்திரத்திலும் மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்திலும் நடேசரபிடேகங்களும், சிவ வழிபாடுகளும் விசேடமாக நடைபெறுகின்றன. இவற்றுள் மார்கழி திருவாதிரை நட்சத்திரம் மிகவும் சிறப்புடைத்து. சிவன் திருவாதிரையானென அழைக்கப்படுகின்ருர்.

தற்போதெழுந்துள்ள பிரச்சனை பிலவங்க வருடம் மார்கழி மாதம் 3-ந் திகதி திருவாதிரையா? அல்லது 30-ம் திகதி திருவாதிரையா? இந்துக்களாற சிவ விரதமாக அனுட்டிக்கப்பட வேண்டுமென்பது தான். காலதேச வர்தத மானங்களை யொட்டி இந்தியப் பஞ்சாங்கங்களை ஆராய்ந்த சிலர் மார்கழி 30-ந் திகதியைக் குறிப்பிடுகின்றனர். இலங்கைப் பஞ்சாங்கங்கள் மார்கழி 3-ம் திகதியைக் குறிப்பிடுகின்றன. இப்பஞ்சாங்கங்கள் யாழ்ப்பாணத்தை மத்திய நாடியாகக் கொண்டு வருட, மாதசங்கிரகம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம், கிரக பாதசாரம், பகல் மானம், உதயாற்பரம் என்பவற்றைக் கணிக்கின்றன. அவ்வாராய்ச்சியின் படி கார்த்திகை மாதத்தில் 6-ம், 7-ம், 8-ம் திகதிகளில், புநர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலிய நட்சத்திரங்களில் மழை பெய்து கொண்டேயிருந்தது. "காலாகாலத்தில் மழையில்லாவிடினும் கார்த்திகை மாதக் கடகச் சந்திரனில் மழை பொழியும்" என்பது நம பெரியோர் வாக்கு. அதுவுமன்றி ஒரு மாதத்தில் ஒரு நட்சத்திரம் இருமுறை வரில், பிந்திய நட்சத்திரத்தையே யாழ்ப்பாணப் பஞ்சாங்கணிதர்கள் திருவாதிரையாகக் கணித்துள்ளனர். உதாரணமாக 1921, துர்மதி வருடம் மார்கழி மாதம் 2-ம் திகதி வெள்ளிக்கிழமை திருவாதிரையும் 29-ம் திகதி வியாழக்கிழமை திருவாதிரையும் வந்தது. வாக்கிய கணிதத்தார் 29-ம் திகதியையே நடேசர் ஆர்த்திரா தரிசனமாகக் கொண்டுள்ளனர். அத்திருவாதிரை சங்கம தோஷமில்லாமல் பூரணமாக மார்கழித் திருவாதிரையாக அமைந்தது. ஆகவே அவர்கள் கணிதத்தைக் குறைகூற இச்சந்தர்ப்பத்தில் இடங் கொடாது.

மார்கழி மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி 40 நிமிடத்தில் சூரியன் தனு ராசியை விட்டு மகரராசியில் பிரவேசிக்கின்ருர். ஆகவே அன்றுமார்கழியும், தையும், தட்சணாயணமும், உத்தராயணமும் வந்து சங்கமிக்கின்றன. அன்றையத் திருவாதிரை தட்சணாயனத்தில் 18 மணி 48 நிமிடத்தையும். உத்தராயணத்தில் 6 மணி 46 நிமிடத்தையும் உள்ளடக்கிக் சங்கமதோஷமடைகின்றது.

பாவை நோன்பு கன்னிப் பெண்கள் தம்நாடு செழிக்கவும், தாம் நல்ல கணவரைப் பெறவும் அருள்சுரக்குமாறு மலைமகளை நோக்கி நோன்பிருப்பதாகும். இறுதி நாளாகிய திருவாதிரைத் திருநாளில் மார்கழிநீராடிச் சிவனை வழிபட்டு நோன்பைப் பூர்த்தி செய்வர். அவர்கள் சங்கமதோஷமுள்ள நாளை விடுத்து மார்கழி 3-ம் திகதி நோன்பைப் பூர்த்தி செய்து நாட்டின் நலனையும் தம் நலனையும் காப்பாற்றுவார்களாக. எம் நாட்டு இந்துக்களனைவரும் பருத்தித்துறையிலிருந்து தெய்வந்துறை வரையுமுள்ள இந்து ஆலயங்களில் நம் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டபடி திருவெம்பாவை அனுட்டிப்பார்களாக.

திருவெம்பாவை என்பது திரு+எம்+பாவை எனப் பிரிந்து, நாம் தெய்வத்தன்மையையும். திருவருளையும் பெறப் பார்வதிதேவி. பாவைத்திருவுருவில் நின்று நோன்பையேற்றுப் பயனளிக்கின்றுள் என்பதாகும்.

ஐயாத்துரை சரவணபவான்
'சோதிடவிலாசா'
நயினுதீவு.

ஃ ஃ ஃ

## விளக்கம் சரியா?

ஈழநாடு [22-11-67] இதழில் கொக்குவில் வாக்கிய கணிதரின் விளக்கம் கண்டேம். மார்கழி 30ல் திருவாதிரையை இரு மாதத்துக்குரியதெனக் கூறும் இவர் தை மாதத்துக்கும், மாசிமாதத்துக்கும் தொடர்புடைய பூசத்தைத் 'தைப்பூசம்' என கொண்டதேன்? 1902ம் ஆண்டு சுபகிருது வருஷம் மார்கழி மாதம் 2ந் திகதி (16-12-02] செவ்வாய்க்கிழமை ஒரு திருவாதிரையும், (11-1-03] மார்கழி மாதம் 28ல் (1903) ஒரு திருவாதிரையும் நிகழ்ந்தபோது இவர் எதைக் கொண்டார்? திரயோதசியும், சதுர்த்தசியும், மிருகசீரிடமும் கூடிய அதில் நடேசர் அபிஷேகம் விதிக்கப்படவில்லையா? முக்கூட்டுக் குற்றம் என்னுயிற்று?

கு. பாலசுந்தரக்குருக்கள்
மாவை.

ஃ ஃ ஃ

## பரீட்சையின் முடிவென்ன?

1966ம் ஆண்டின் நடுப்பகுதியில நடந்தேறிய மாணவ ஆசிரியர் பரீட்சை முடிவுகளை இன்னும் வெளியிடாமல் கல்விப் பகுதி அசிரத்தையா யிருப்பதையிட்டு நாம்கவலையடைகிறேம்இனியும் காலதாமதம் செய்யாமல் அப்பரீட்சையின் முடிவுகளை வெளியிடுவார்களா?

செ. தருமராசா
புலோலி கிழக்கு.

## 'பத்து வருடத்தில் பலன்கிடைக்கும்'

அக்குரணை, செவ். 'கிடைக்கக்கூடிய வேலைகளுக்கு தரமானவர்களைத் தயாரித்து அவ்வேலைகளில் நியமிப்பதே புதிய கல்வித் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின்பலன் 10 வருடங்களின் பின்னரே தெரியும்',

இவ்வாறு வித்தியாதிபதி திரு. வி. துரைசிங்கம் மத்தியமாகாண கல்லூரிகளின் அதிபர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் கூறினுர்.

பாடசாலைகள் புனரமைப்புத் திட்டம் சம்பந்தமாக கல்லூரிஅதிபர்களுக்குவிளக்குகையிலேயே திரு. துரைசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாயத்துறையில்மாணவர்களுக்கு... நல்ல பயிற்சியளிப்பது அவசியம் என்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

# வானில் தோன்றிய வஸ்து என்ன?

சாதாரணமாக யாழ்ப்பாணத்தில் மழை பெய்தது என்றுலே அது ஒரு புதினம். இப்பொழுது மழைகாலமாதலால் அதை ஒரு புதினமாக எழுதுவது சற்று அசட்டுத்தனமாகத் தோற்றும்.

ஆயினும் சென்ற திங்கட்கிழமை காலையில் தொடங்கிய மழை பத்து நிமிடங்கள் கூட ஓய்வில்லாமல் குடாநாடு முழுவதையும் ஒரே அமுக்கமாய் அமுக்கிப் பிடித்துக் கொண்டு பொழிந்து தள்ளுவது நிச்சயமாக ஒரு புதினம் தான். இது அச்சுக்குப்போகும் வரை மழை ஓயவில்லை.

கார்த்திகை விளக்கீட்டுக்குப் பிறகு மழை குறைந்து விடுமென்று அக்காலத்தில் பெரியவர்கள் கூறுவார்கள் ஆனல் அது அந்தக் காலம், இது இந்தக்காலம்!

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

இந்த அடை மழைக்கு காரணம் என்னவென்பதற்கு சிலர் கூறும் விளக்கம் ஒரு மாதிரியாயிருக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சுமார் எட்டுமணியளவில் ஆகாயத்தில் அதிசயமான ஒரு வெளிச்சம் தெரிந்ததாம் அந்தக்கும்மிருட்டில் அதன் பிரகாசம் பூமி முழுவதையும் ஒளிமயமாக்கியது. இந்தச் செய்தி உண்மையென்பதில் சந்தேகமில்லை. ஏனென்றுல பற்பல கிராமங்களில் வசிப்பவர்கள் இதை நேரில் கண்டதாக இவரிடம் தெரிவித்திருக்கிறுர்கள்.

அந்தச் சமயத்தில் இடி முழக்கம் இருக்கவில்லை. ஆதலால் அது மின்னல் அல்ல. அன்றியும அது மின்னலைப்போல் அல்லாமல ஏதோ ஒரு மத்தாப்பு வெடித்ததுபோலக் காட்சி தந்ததாம். ஆகையால் அது என்ன வஸ்து என்று ஒவ்வொருவரும் தத்தம் கற்பனைக்கு எட்டியவாறு வியாக்யானம் கூறினுர்கள்.

ஒருவர் ரொக்கட் என்றுர்; மற்றவர் வால்வெள்ளி என்றுர்; இன்னெருவர் பறக்கும் தட்டு என்றுர்; வேறெருவர் பலூன் என்றுர்; இந்த விடாமழைக்கு அறிகுறியாகவந்த வான தூதுவன் என்றுர், இன்னெருவர். இப்படியே பல ஹேஷ்யங்கள் கூறப்பட்ட போதிலும் அந்த வஸ்துவுக்கும் மழைக்கும் ஏதோ தொடர்பிருக்கத்தான் வேண்டுமென்று இறுதியில் அபிப்பிராயம் திரண்டது.

நமது பூமியைச் சுவிந்துள்ள காற்று மண்டலத்துக்கும் அப்பாலுள்ள சூன்ய வெளியில் இரும்பு முதலிய உலோகப் பொருட்களடங்கிய திடப்பதார்த்தங்கள் கோடிக்கணக்கான அளவில் சுற்றித் திரிகின்றனவென்றும், இவற்றில் சில பூமிக்கு வெகு சமீபமாக வந்தால் அதன் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு காற்று மண்டலத்தில் உராய்ந்து கொண்டு விழும்போது எரி நட்சத்திரங்கள்போல் பிரகாசிக்கின்றனவென்றும் விஞ்ஞானிகள் கூறுவதை கேள்விப்பட்டிருக்கிறேம்.

அப்படி விழுகின்ற 'வெள்ளி'யின் பருமனைப் பொறுத்து அதன் பிரகாசமும் வித்தியாசப்படும். அசாதாரண பருமனுள்ள ஒரு 'வெள்ளி' விழும்போது அதன் பிரகாசமும் அசாதாரணமாய்த் தானிருக்கும்.

இதுபோல ஒன்றுதான் அன்றிரவு விழுந்ததோ என்னவோ யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சி முதலிய வன்னிப்பகுதிகளிலும், கிழக்கு மாகாணத்திலும் அசாத்திய மழை பெய்வது உண்மை.



யாழ். நாட்டியாலயா ஆதரவில் இன்றுமாலையாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் நாட்டியாலய மாணவிகளின் நடன விருந்தில் ஒரு காட்சியான மயில் நடனத்தின் ஒரு தோற்றம். திருமதி விமலா மோகநாதன் இதனைத் தயாரித்தளிக்கிருர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொன்னம்பலவாணேசர் கோயில் இராசகோபுரவேலைகள் பூர்த்தி

கொழும்பு, செவ்.

கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயிலின் இராச கோபுர வேலைகள் நிறைவேறி விட்டன. கும்பாபிஷேக விழா இன்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமாயிற்று. காலை 9 மணி 19-நிமிடத்தில் கருமாரம்பம் நிகழ்ந்தது. டிசம்பர் 6-ம் திகதி வரை கும்பாபிஷேக அலுவல்கள் நடைபெறும். அன்று அதிகாலை 6 1/4 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் தூபி அபிஷேகமும், காலை 11 மணி 13 நிமிடத்திற்கும், 12 மணிக்குமிடையில் மகாகும்பாபிஷேகமும் நடைபெறும்.

இலங்கையின் திராவிட கட்டிடக்கலை சிற்பக்கலை, ஆகியனவற்றிற்கு நவீன எடுத்துக் காட்டாக விளங்கும் ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோயிலின் இராச கோபுர வேலை நிறைவெய்தியது குறித்து சைவ உலகம் பெருமைப்படுகிறது.

---

## தமிழுக்குப் பதில் ஆங்கிலத்தில்

சுழிபுரம், செவ்.

யாழ்ப்பாணத்திலுள்ள இ.போ.ச. பிரதேச முகாமையாளருக்கு பஸ் சேவை சம்பந்தமாக முறைப்பாடு செய்யப்படும் கடிதங்கள் தமிழ்மொழியில் எழுதி அனுபப்பட்டும் அதற்குரிய பதில் ஆங்கிலத்திலேயே கிடைக்கிறதாம். சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கச்செயலாளர் திரு. க.வாமதேவன் யாழ்ப்பாண இ.போ.ச. முகாமையாளருக்குப் பல கடிதங்கள் தமிழ் மொழியில்மட்டும் எழுதி அனுப்பியும் அவற்றுக்கெல்லாம் ஆங்கில மொழியிலேயே பதில்கள் கிடைத்துள்ளனவாம்.

---

## புதிய பஸ்சேவை

வல்வெட்டித்துறை, செவ்.

பருத்தித்துறையிலிருந்து தலைமன்னருக்கும் முல்லைத்தீவுக்கும் இடையேயான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பருத்தித்துறையிலிருந்து தலைமன்னருக்குச்செல்லும் பஸ் காலை 8-25 மணிககும், பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் பஸ் காலை 5-35 மணிக்கும் புறப்படும்.

இச்சேவைகள் பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி-காடிகாமத்திற் கூடாகவே செல்கின்றன.

---

## மயிலிட்டியில் மீனுக்கு விலை

காங்கேசன்துறை, செவ்

பல லொறிகளில் கொழும்புக்கு மீன் அனுப்பும் மயிலிட்டிப்பகுதியில் மீன்விலை அதிகரித்துள்ளது இப் பகுதியில் உள்ள மீனவர்கள் வேறு இடங்களுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ளதால் இப்பகுதியில் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதே இதற்குகாரணம்.

---

# "தாளையடியின் சிறுகதைகளை நூலாக்க வேண்டும்"

## அஞ்சலிக் கூட்டத்தில் பேச்சு

சாவகச்சேரி, செவ்

"துணிவும், அஞ்சாமையும் நிரம்பிய சிறுகதை, வானொலி, நாடக எழுத்தாளரான தாளையடி சபாரத்தினத்தின் மறைவு எழுத்தாளர் உலகிற்கு ஒரு பேரிழப்பு. அவரின் மறைவு குறித்து எவருமே கண்ணீர் சிந்தாதிருக்க முடியாது. தனது எதிர்காலத்தைப் பற்றிய அக்கறையற்ற அவர், நல்ல பல அடிப்படைக் கருத்துக்கள் நிறைந்த சிறுகதை இலககியத்தை வளர்த்துள்ளார். இத்துறையில் தான் செய்த பெருந் தொண்டை நினைத்து திருப்தியடைந்து இவ் உலகிலிருந்து நீண்ட ஒய்வு பெற்றுர்போலும். அவரது வாழ்க்கையும் செயலும் நம் நாட்டு இலக்கிய வரலாற்றில் பின்னிப்பிணைக்கப்படவேண்டும். அவரின் இழப்பு சிறுகதை உலகத்திற்கே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்."

இவ்வாறு காலஞ்சென்ற சிறுகதை எழுத்தாளரும், வானொலி நாடக எழுத்தாளருமான தாளையடி சபாரத்தினத்தின் மறைவு குறித்து மட்டுவில் தெற்கு கந்தர் மன்றத்தினரால் நடாத்தப்பட்ட அனுதாபக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய கல்வயல் அருள் வேலழகன் கூறினுர்.

"ஈழநாட்டில் சிறுகதை இலக்கியத்துறையில் தாளையடி சபாரத்தினம் நல்ல சேவை செய்துள்ளார். அவர், அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்ட சிறு கதைகளைச் சேகரித்து தொகுத்து அச்சேற்றி வெளியிடுவதன் மூலம் அவரின் சேவையை நம் சமுதாயத்தில் நன்கு பயன் படச் செய்யலாம்" என அவர் மேலும் கூறினுர்.

கந்தர் மன்றத்தின் சார்பில் தாளையடி சபாரத்தினத்தின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர்க்கும் அனுதாபச் செய்தி அனுப்பிவைக்கப்பட்டது.

மறைந்த எழுத்தாளருக்குக் கூட்டத்தில் 3 நிமிடம் மௌனஅஞ்சலியும் செலுத்தப்பட்டது.

---

# 300 ரூபாய்க்கு மேல்சம்பளம்பெறும் ஊழியரும் நிவாரணம் கேட்கின்றனர்

கொழும்பு, செவ்

300 ரூபாய்க்கும் அதற்கு மேலாகவும் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு நாணயமதிப்புக் குறைவு நிவாரணமாக சம்பள அதிகரிப்பு வேண்டும் என்று அரசாங்க சேவையிலுள்ள தொழிற் சங்கங்கள் விரைவில் பிரதமரிடம் கோரவிருக்கின்றன.

இக்கோரிக்கையை முன்வைத்து அரசாங்கசேவையிலுள்ள எல்லாச்சங்கங்களும் ஒன்றுபட்டு ஒருமுகமாக நின்று பிரதமரிடம் விண்ணப்பம செய்வதற்கு இப்பொழுது ஆயத்தம் செய்துவருகின்றன.

நாணய மதிப்புக்குறைவு நிவாரணமாக 300 ரூபாய்க்குக் குறைவான சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்குத்தான் அரசாங்கம் சம்பளத்தைச் சற்று அதிகமாகக் கொடுக்கப்போவதாக அறிவித்துள்ளது. ஆனல் 300 ரூபாயும் அதற்குமேலாகவும் சம்பளம்பெறும் அரசாங்க ஊழியர்களோ ரூபாய் மதிப்புக்குறைவினுல் தாங்களும்பாதிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். மண்ணெண்ணெய் விலை அதிகரிப்புப் போன்றவற்றினுல் தாங்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகக் கூறுகின்றனர். ஆகவே அரசாங்கம் எங்களுக்கும் ஏதாவது ஒருவிதத்தில் நிவாரணம் தரவேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.




எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

**ரேயல் டிஸ்பென்ஸறி**

PHONE 397 JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்டம்

காங்கேசன்துறை, செவ்.

அளவெட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன் துறை குருவிளையாட்டுக் கழகத்திற்குமிடையில் காங்கேசன் துறை பட்டினசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டி மிகவும் உற்சாகமாக நடைபெற்றது.

முதற்பிரிவுப் போட்டியில் குருவிளையாட்டுக் கழகம் 3 கோல்களைப்போட்டுவெற்றியீட்டியது. இரண்டாம்பிரிவில் அளவெட்டி ஒருகோல் போட்டு வெற்றியீட்டியது.

## பண்ணாகம் மெய்கண்டானுக்கு முதலிடம்

சுழிபுரம், செவ்.

அகில இலங்கை விவேகானந்த சபையினரால் நடாத்தப்பட்ட நாவலர் தினமேற்பிரிவு பேச்சுப் போட்டியில் முதலாம்இடத்தையும், மூன்றும் இடத்தையும் பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த இருவர் பெற்றுக் கொண்டனர். செல்வன் த. சந்ததியார் 1-வது இடத்துக்கான தங்கப்பதக் கத்தையும், செல்வி அ. செல்லாச்சி 3-ம் இடத்துக்கான புத்தகப் பரிசிலையும் பெற்றுக்கொண்டனர்.

## "மீனவர் கஷ்டத்தை ...க்குக"

யாழ்ப்பாணம், புதன்

கடந்த புயலின்போது, மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பாஷையூர் மீன்பிடித்துறைமுகம் இதுவரை திருத்தப்படாததால் மீனவர்கள் தங்கள் வள்ளங்களைப் பாதுகாக்கமுடியாமல் கஷ்டப்படுவதாக, யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், யாழ்ப்பாண மாநகரசபை விசேஷ கமிஷனர் திரு என். நடேசனுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: இத்துறைமுகத்திற்குமின்சார வெளிச்சம் அவசியம் தேவைப்படுகிறது. வெளிச்சமில்லாததால் இரவில் வள்ளங்களில் திரும்பும் மீனவர்கள் துறைமுகத்தைத் தெரிந்துகொள்ள முடியாது கஷ்டப்படுகின்றனர். எனவே பிரகாசமான ஒரு மின்சார வெளிச்சத்தை துறைமுகத்திற்கு இணைத்துத்தரவேண்டும்.

பாஷையூர் சென். அந்தோனியார் வீதியிலுள்ள வீடமைப்புத் திட்டத்திற்கு இதுவரை மின்சார வசதி அமைக்கப்படவில்லையென்றும் மாநகர சபையினால் கட்டப்பட்ட இவ்வீடுகளுக்குமின்சாரவசதிஅளிக்கப்பட வேண்டுமென்றும்கடிதத்தில் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

## ஜே. பி.க்கு பாராட்டு

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை கருகம்பனையைச் சேர்ந்த திரு. பொன்னம்பலம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதை யிட்டு அன்னாருக்கு மேற்படி கிராம மக்களால் ஒரு பாராட்டு வைபவம் நடாத்தப்பட்டது.

இவ்வைபவத்தில் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு புதிய சமாதானநீதவான் திரு. பொன்னம்பலத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர். பாராட்டு வைபவத்திற்கு திரு. பொன்னம்பலம் நன்றி தெரிவித்தார்.

## 'வித்தை'யில் தோற்றார்

சாவகச்சேரி, செவ்.

பொய் கூறி ஏமாற்றிப் பணம் பெற முயன்றவர் தனது வித்தையில் தோல்வி கண்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் ஒருவர் சாவகச்சேரியை அடுத்துள்ள மறவன்புலவில் இளைப்பாறிய பிஸ்கால் ஊழியர் திரு. மாணிக்கம் வீட்டிற்குச் சென்று அவர்களின் உறவினர் ஒருவர் மட்டக்களப்பிலிருந்து தனது லொறியில் பொருட்கள் அனுப்பியுள்ளதாகவும் கொக்குவிலில் லொறி நிற்பதாகவும் கூறி ரூபா 40 தந்தால் உடன் வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்ப்பதாகவும் கூறினாராம். இதில் சந்தேகம் கொண்ட அவர்கள் தமது மகனையும் அவருடன் அனுப்பிப் பணம் பின்பு தருவதாகவும் கூறினராம். ஆனால் இதை விரும்பாத அந்த நபர் மறுத்துத் திரும்பிச் சென்றுவிட்டாராம்.

பிஸ்கால் ஊழியர் குடும்பத்தினர் இதுபற்றி மட்டக்களப்பிலிருக்கும் இவர்களது உறவினர்களிடம் விசாரித்த போதுதான் இவ்விஷயம் பொய் எனத் தெரிய வந்ததாம்.

## கண்ணகி படிப்பகம் தீர்மானம்

காங்கேசன்துறை செவ்.

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின்திடீர் விலை உயர்வை தடுக்க ஆவன செய்யுமாறு உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியைக் கோரும் தீர்மானமொன்று மயிலிட்டி வீரமாணிக்கதேவன் துறை கண்ணகி படிப்பக விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மயிலிட்டிச் சந்தியில் தபால் பெட்டியொன்றை நிறுவித்தருமாறு தபால் மா அதிபரைக் கோரும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு திரு. உ. குணபாலசிங்கம் தலைமை தாங்கினர்.

## கழக நிர்வாகிகள்

அளவெட்டி, புதன்

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்தின் தேர்வுக் கூட்டம் அளவெட்டி அம்பிகா வாசிகசாலை மண்டபத்தில் திரு. பொ. ஜெயானந்தன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்:.

தலைவர்: திரு. க. திருஞானம், காரியதரிசி: இ. நாகராசா, தனாதிகாரி: க. விஜயரட்ணம்.

இதையடுத்து முதலாம் பிரிவுக் கப்டனாக திரு. பொ. ஜெயானந்தனும், இரண்டாம் பிரிவுக் காப்டனாக ஐ. திருநாவுக்கரசும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாதை சீர்கேடு

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறை உடுப்பிட்டி பிரதான வீதியில் முதலாம் மதவடிப் பாதை போக்கு வரத்திற்கு பெரிதும் இடைஞ்சலாகவிருந்து வருகிறது. அவ்விடத்தில் கற்கள் சிதறுண்டு பள்ளமாகவிருந்து வருவதால் அப்பாதையால் வாகனங்கள் போக்குவரத்து செய்யமுடியாதநிலையில் இருக்கிறது.

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை செயலக ஆலோசனை மண்டபத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரான திரு. சோ. வன்னியசிங்கம் "நாணய மதிப்புக் குறைவு" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார். (ந. நி.)

# வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 29-11-67

## இலங்கை

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடலகள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 8-00 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளைய சங்கதி,

இரவு 6-15 பாட்டு எஸ். சண்முகராகவன், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 முத்திநெறி-சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 பாட்டு-பரமேஸ்வரி விஜயரத்தினம்.

## சென்னை - 1

காலை 6-00 - வந்தேமாதரம், 6-05- துதிப்பாடல்கள் 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள். 6-35 அருள்வாக்கு, 6-45 இசை அமுதம், 7-15 தமிழில் செய்தி, 7-30 பாமாலை 8-15 பாட்டு, 8-45 திரைகானம், 9-15வயலின, 9-45 வாத்திய இசை, 10-00 பாட்டு, 10-35ஆங்கிலததில் செய்தி, 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம். 1-30 வாத்தியக் கோஷ்டி, 1-45 திரைகானம் 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30 பாடற்பயிற்சி 5-45 மெல்லிசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்ய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 வானொலிக்களஞ்சியம், 8-15 பாட்டு, 8-45 ரேடியோ செய்தி மலர், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 9-30 வயலின். 10-00 பாட்டு.

## திருச்சி

காலை 6-30 வந்தே மாதரம், 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 6-45 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-50 பக்திப் பாடல், 6-55 அற உரை, 7-00 துதிப்பாடலகள், 7-15 தமிழில் செய்தி 7-30 முத்துத்தாண்டவர் பாடல்கள், 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 வீணை, 11-55 பிராந்தியச் செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம், 1-30 ஆங்கிலத்தில் செய்தி, 1-50 இசை மஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-00 பாட்டு, 5-30 திரைப்பட இசை.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15திரைப்பட இசை, 6-30 ஊர்ச்சாவடி, 6-35 நாட்டுப் பாடல்கள், 6-45 இசைப் பயிற்சி, 7-00 பொதுமேடை, 7-15 தமிழில் செய்தி. 7-30 விவசாயிகளுக்கான செய்தி, 8-00 முற்றுகை-நாடகம், 8-15 இசை நிகழ்ச்சி, 8-45 இசை மாலை, 9-00 ஆங்லத்தில் செய்தி, 9-15 பலகணி 9-45 வாத்திய இசை, 10-00 பாட்டு, 10 30 ஆங்கிலத்தில் செய்தி.

# கொழும்பு விவேகானந்தசபை பரீட்சை முடிவுகள்

## நாவலர் நினைவு பேச்சுப்போட்டி

கொம்பனித்தெரு, செவ்.

கொழும்பு விவேகானந்த சபையாரால் இம்மாதம் 24-ந் திகதி நடத்தப்பெற்ற ஆறுமுகநாவலர் நினைவு பேச்சு வன்மைப் போட்டியிலும், 1965-ம், 66-ம் ஆண்டுகளில் மேற்படிசபை நடத்திய அகில இலங்கை சைவ சமயபாடப் பரீட்சைகளிலும் பரிசில்பெறுவோர் விபரம் கீழ்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு 1-ம் பரிசில் செல்வி த சிவசோதி மட்டக்களப்பு தெய்வநெறிக் கழகம், 2-ம் பரிசில் செல்வன் த ஜீவானந்தம் ம. தெ. க., 3-ம் பரிசில் செல்வி இ தயாபரி யா குரும்பசிட்டி ஊ. பாடசாலை,.

மத்தியபிரிவு: செல்வன் சி நாகேந்திரா தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, செல்வி ஐ யோகேஸ்வரி மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர் கல்லூரி, செல்வி த விஜயகுமாரி ம தே க, செல்வி த சந்ததியார் பண்ணாகம்மெய்கண்டான் வித்தியாசாலை, செல்வி தா இந்திராணி, செல்வி அ செல்லாச்சி, ப. மெ. வி.

### சமயபாடப் பரீட்சை 1966

பாலர்பிரிவு 1 செல்வன் சி தயாபரன் யா கட்டைவேலி ஞானசாரியர்கல்லூரி, செல்வன் உ யோகேந்திரன் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, செல்வி சி பிரபாவதி யா கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரி, செல்வன் பா இரவீந்திரன் யா வல்வெட்டி அ மி வித்தியாசாலை, செல்வன் இ சுரேஸ்சசந்திராபம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி,

### பாலர் பிரிவு 2

செல்வி மா. துளசி யா. வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரித் தமிழ்க்கலவன் பாடசாலை, செல்வி ச. கலாவதி வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயம், செல்வி நா. ரஞ்சனி வெ. சை. வி., செல்வன் த. பாலசண்முகநாதன், யா. மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாசாலை, செல்வி. து. சியாமளா வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயம்.

### ஆரம்ப பிரிவு 1

செல்வி ச. இரவிச்சந்திரிகா வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம், செல்வி வ. மல்லிகாதேவி வ. தாண்டிக்குளம் இராமகிருஷ்ண சங்க வித்தியாசாலை, செல்வன் ந. நாகேந்திரா பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, செல்வன் வே. ஜெகசோதி யா. கட்டைவேலி ஞானசாரியக்கல்லூரி செல்வி பா. சுகந்தி, நெல்லியடி மெ. மி. தமிழ்க் கலவன் பாடசாலை.

### ஆரம்ப பிரிவு 2

செல்வி செ. கலாராணி புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, செல்வன் நா. சிவபாலன் யா. தும்பளை சைவப் பிரகாச வித்தியாசாலை, செல்வி அ. உமாராணி திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலயம், செல்வன் சி. இராசேஸ்வரன் யா. குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை, செல்வி சி. தயாராணி நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

### கீழ்ப்பிரிவு -1:

செல்வி வி. ஜெயராணி மட். வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம், செல்வி ச. சுபாசினி மட். வ. ம. வி., செல்வி த. புனிதவதி வ. தாண்டிக்குளம் இராமகிருஷ்ண சங்க வித்தியாசாலை, செல்வி க. புவனேஸ்வரி மாத்தளை பி. எம். எஸ். பாடசாலை, செல்வன் வே. சத்தியமூர்த்தி பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயம்

கீழ்ப்பிரிவு-2: செல்வி ஆ. புஷ்பவதி, வ. வெட்டி வாய்க்கால் அ த. க. பாடசாலை, செல்வி க. இராஜேஸ்வரி. யா. உடுத்துறை சி. சி. த. க. பாடசாலை, செல்வன் மு சின்னக்கோன், யா. விடத்தற்பளை கமலாசனிவித்தியாசாலை, செல்வி வி. கனகரத்தினம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம், செல்வி இ. யோகராணி, கொடிகாமம், அரசினர், தமிழ் வித்தியாசாலை.

மத்தியபிரிவு: செல்வி இ. இராஜகோகிலம், வேலணை மத்திய மகாவித்தியாலயம், செல்வன் வே. உமாச்சந்திரன், நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம், செல்வன் க. மோகனதாசன், வேலணை மத்திய மகாவித்தியாலயம், செல்வி இ. சம்யுக்தாதேவி, வே. ம. ம. வி., செல்வன் ந. சிவகுமார், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

மேற்பிரிவு-1: செல்வி ச. யோகேஸ்வரி, யா. மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், செல்வி செ. ரூபாவதி, வெள்ளவத்தை, சைவமங்கையர் வித்தியாலயம், செல்வி. சி. சாந்தா, வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம், செல்வி சந்திரலோசனி சுன்னாகம் இராமநாதன், கல்லூரி, செல்வி சி. யோகராசமலர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி.

மேற்பிரிவு-2; செல்வன் பெ. சிவநேசராசா, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, செல்வன் த. சர்வானந்தன், யா. இ. க., செல்வி த. இந்திராதேவி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், செல்வி தெ. கிருபாகரன், மட்டக்களப்பு இராமகிருஷ்ண சங்கம், செல்வன் வை. ஞானசுந்தரம், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

### சமய பாடப் பரீட்சை - 65

பாலர் பிரிவு - 1: செல்வி சி. ஸ்ரீரதி கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியசாலை, செல்வி மா. துளசி வண்ணார்பண்ணை இந்துக் கலவன் பாடசாலை, செல்வன் க. பாலகுமார் யா. குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை, செல்வன் தி. நித்தியானந்தன் கரவெட்டி மா. வி, செல்வி நா. நறியா. பொன்னாவெளி சைவப் பிரகாச வித்தியாசாலை.

பாலர் பிரிவு - 2: செல்வி நா. இரத்தினவதனி யா வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை, செல்வி க. தனபாலசிங்கம் க. மா. வி, செல்வி ஐ. புஷ்பராணி யா பூநகரி நல்லூர் அ. த. க. பாடசாலை, செல்வன் சி. சிதம்பரநாதன் வட்டு. தி. வி, செல்வன் க. அப்பலவாணர் யா புலோலி தெற்கு புற்றளை வித்தியாலயம்.

ஆரம்ப பிரிவு - 1: செல்வன் மு. பரமநாயகம் யா ஏழாலை தெற்கு சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை, செல்வன் சி. சிவராசா க. மா. வி, செல்வன்ஞா. தேவ்தேவன் யா ஏ. தெ. சை. க. பா. செல்வி க. பாலசரஸ்வதி, க. மா. வி, செல்வன் சி. சிவபாலன் க. மா. வி.

(நாளை முடியும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுருட்டுப் பெட்டிக்குள் விலை உயர்ந்த சாரிகள்

## கடத்தல் முயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், செவ்வாய்

புதிய முறையொன்றைக் கையாண்டு, பொலிசாருக்கு 'டிமிக்கி' கொடுத்து, அனுராதபுரத்துக்கு விலையுயர்ந்த இந்தியச் சேலைகளை கடத்த சிலரால் எடுக்கப்பட்ட முயற்சி கடைசி நேரத்தில் பொலிசாரால் முறியடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இச்சம்பவம் நேற்று மாலை கந்தர் மடத்தில் நடைபெற்றது.

பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு இராசையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இதனைக் கண்டு பிடித்தனர். அனுராதபுரத்துக்கு அனுப்பவென சுருட்டுக்கள் அடுக்கப்பட்டிருந்த ஒரு பெட்டிக்குள் சுருட்டுகளுக்கு நடுவிலிருந்து சுமார் 10,000 பெறுமதியான இந்தச் சேலைகளை பொலிசார் கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஔவையார், டெக்கா சாரிகள் உட்பட 'பட்டுக் கொட்டி' என்ற உயர்ந்த ரக சாரிகளும் இங்கிருந்து கண்டு பிடிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்களும், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவரும் சுங்கப்பகுதி சப் கலெக்டர் திரு. விமலதர்மா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். (ந. நி.)

# 'சுயதேவை பூர்த்திக்கு ஒத்துழைப்பு தருக'

## பிரதமர் வேண்டுகோள்

கொழும்பு, திங்கள்

ரூபாயின் மதிப்புக்குறைக்கப்படாதுபோனால் நாட்டில் அத்தியாவசியப பொருட்களுக்கு பெருமளவில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் என்றும் அதனல் ரூபாய் மதிப்புக் குறைப்பு தவிர்க்க முடியாததாகி விட்டது என்றும் பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயக்கா இன்று பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

உளுள்ர் உற்பத்திப்பொருட்களுக்கு ஊக்கமளிக்கப்படும் என்றும் கூறிய பிரதம மந்திரி உணவு மற்றும் அத்தியாவசிப்பொருட்கள் விஷயத்தில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் முயற்ச்சியில் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அரசாங்கம் பணக்காரர்களுக்குப் போய்க் கொண்டிருக்கும் செல்வங்களில் ஒரு பகுதியை எடுத்து ஏழை மக்களுக்குப்பகிர்ந்து கொடுக்கிறது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

எட்டியாந்தோட்டைஎம். பி. டாக்டர் என். எம். பெரெரா பேசுகையில் ரூபாயின் மதிப்பைக்குறைப்பதற்கானகாரணமே இல்லை என்ருர்.

# இறக்குமுன்னர் பென்ஷன் கிடைக்குமா?

வெள்ளவத்தை, திங்கள்

கரவெட்டியைச் சேர்ந்த 57 வயதுடைய அரசாங்க ஊழியர் ஒருவர் இப்போது கொழும்பு மாநகர வீதிகளில் பென்ஷன் அலுவலகத்திற்கும் தாம் முன்னர் வேலைபார்த்த காரியாலயங்களுக்குமாக ஓடிக்கொண்டு திரிகிருர்.

இவரை ஓய்வுபெறும்படி கூறிப் பென்ஷன் கார்ட்டும் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள். ஆனல் இவருக்கு ஓய்வுபெறும் நோட்டீசு கொடுத்து ஆறு மாதங்களாகியும் இன்னும் பென்ஷன் வந்தபாடில்லை. எனவேதான், தான் இறக்கு முன்னர் இந்தப் பென்ஷன் பணத்தைக் கண்டுவிட வேண்டுமென்ற ஆவலோடு இவர், தாம் வேலைபார்த்த பழைய காரியாலயங்களுக்கு அலைந்து தமது சேவைக் கால விபரங்களைச் சேகரித்துக்கொண்டிருக்கிருர்.

# ஆட்சி மொழி மசோதா லோக் சபையில் தாக்கல்

## நேருவின் வாக்குறுதியை காப்பாற்றும் முயற்சி

புதுடில்லி, நவ. 27

இந்திபேசாத மக்கள் வாழும் ராஜ்யங்கள் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளாதவரை ஆங்கிலத்தையும் இந்தியுடன் ஆட்சி மொழியாக வைத்துக் கொள்வதற்கான மசோதா ஒன்றை இன்று லோக சபையில் உள்துறை மந்திரி திரு. சவான் சமர்ப்பித்தார்.

இந்தி மொழிபேசாத மக்களுக்கு ஆட்சிமொழி சம்பந்தமாக காலஞ் சென்ற பிரதமர்கள் நேருவும், சாஸ்திரியும் கொடுத்துள்ள வாக்குறுதிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மசோதா சபையில் தாக்கல் செய்யப்பட்டதும் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த சேக் கோவிந்ததாஸ், எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. மதுவுமையே ஆகியவர்கள் அதனை எதிர்த்தார்கள் ஆசியப் சாஸனத்துக்கு எதிரானது இந்த மசோதா என்று அவர்கள்கூறினுர்கள். ஆனல் ஏ.கே. கோபாலன் போன்றவர்கள் அரசியல் சாசனத்தை இந்த மசோதா மீறவில்லை என்று வாதித்தார்கள்.

மசோதா தாக்கல் செய்யப்படுவது குறித்து நடைபெற்ற வாக்கெடுப்பில் 181 சாதகமாகவும் 81 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

### ராஜாஜி கருத்து

ஆட்சி மொழி மசோதா இந்தி பேசும் மக்களையும் திருப்தி செய்யாது. இந்தி பேசாத மக்களுக்கும் உதவி செய்யாது என்று தற்பொழுது புதுடில்லியில் [illegible] வெளியிட்டுள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### தேநீருக்கு

## பருத்தித்துறையிலும் விலை அதிகரிப்பு

புலோலி, திங்கள்

பருத்தித்துறைநகரிலுள்ள பல தேநீர்க் கடைகளில் தேநீர் விலை திடீரென உயர்ந்தது.

பால் கலந்த தேநீர் 1 சதமாகவும், வெறும் தேநீர் 7சதமாகவும் விற்கப்பட்டு வருகின்றது. நேற்று முன் தினம் முதல் சீனிக்கு 5சதம் விலையுயர்த்தப் பட்டதே இதற்குக் காரணமெனக் கூறுகின்றனர்.

## "இன்று உணர்ந்து விட்டனர்"

யாழ்ப்பாணம், செவ்.

"உலகத்தில் எந்தநாட்டிலுமே இல்லாத ஒருபுதிய சலுகையை எமது அரசாங்கம் 1966-ம்ஆண்டு டிசம்பர் மாதம் நமதுநாட்டு மக்களுக்கு அளித்தது. ஒவ்வொருவாரமும் இலவசமாக வழங்கப்படும் ஒருகொத்து இலவச அரிசித் திட்டமே இச்சலுகையாகும். ஆனல் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட இரண்டரைவருட காலங்களிலும் இருவருடங்களை அவசரகாலச் சட்டத்தைப் பாவித்தே அரசு செலுத்திவந்துள்ளது."

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேசக்கிளைச் செயலாளரான திரு. ஐ. ஆர். அரியரத்தினம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

'ஆரம்பத்திலிருந்தேதமிழ் மொழி வளர்ச்சியை விரும்பிய தமிழர்களும், சிங்கள மொழிவளர்ச்சியை விரும்பிய சிங்களவர்களும் ஒத்துழைத்திருந்தால் எமது உரிமைகளைச் சுலபமாகப் பெற்றிருக்கமுடியும். இந்தக் கஷ்டங்களிலிருந்து விலகுவதற்கும் எதிர்காலத்தில் தமிழ் மொழியைக் கட்டி வளர்ப்பதற்கும் இந்தநோக்கத்தையுடைய இருசமூகத்தவரும் ஒன்றுசேரவேண்டுமென்பதை இன்று அநேகர் உணர்ந்துவிட்டார்கள்.' (ந- நி;)

## தொகுதிவாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்கையில், சிங்கள-தமிழ் பாட நூல்களின் மொழி பெயர்ப்புகள் சமகாலத்தில் நடைபெறுகின்றதென அறிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

இடமாற்றம், வட்டாரக் கல்வி உத்தியோகத்தர் தெரிவு, அரசினர் பயிற்சிக் கலாசாலை தெரிவு சம்பந்தமாக வடஇலங்கை, அகில இலங்கை, இலங்கை அரசினர் ஆசிரியர் சங்கங்களும் கிளிநொச்சித் தொகுதி ஆசிரியர் சங்கமும் திரு. இரத்தினத்திற்கு தெரிவித்த விஷயங்கள் யாவும் ஆலோசனை சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதெனவும் தெரியவருகிறது.

### முருகண்டியில்

# பஸ்-டாக்ஸி மோதல் ஒருவர் ஸ்தலத்தில் பலி

## கடற்படை அதிகாரிக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

முருகண்டியில் நேற்று அதிகாலை நடைபெற்ற பஸ்—டாக்ஸி மோதலில் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானுர். மற்றுமொருவர்படுமோசமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு நேற்றுக் காலை சென்ற இ.போ.ச. கடுகதி பஸ் வண்டியும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த டாக்ஸி ஒன்றுமேவிபத்துக்குள்ளானவையாகும். டாக்ஸி சாரதியானஜோன் ஜோமிசிங்கோ ஸ்தலத்திலேயே பலியானுர். டாக்ஸி சுக்குநூருகநொருங்கியது. டாக்ஸியில் பிரயாணம் செய்த மற்ற நபரான காரைநகர்கடற்படை லெப்டினண்டான இராசையா என்பவர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறஅனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிமாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா நேற்றுமாலை இது சம்பந்தமாக ஸ்தல விசாரணைநடத்தினர். உதவி பொலிஸ் சுப்பிரண்டன் திரு. வீரசிங்கா சம்பவம் நடந்த இடத்தை நேற்றுச் சென்று பார்வையிட்டார். சம்பந்தப்பட்ட பஸ் சாரதியான பொன்னையா தங்கவேலு என்பவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (ந. நி)

# 'முல்லைத்தீவு டிப்போவுக்கு நேரில் வந்து பாருங்கள்'

## இ. போ. ச. தலைவருக்கு வவனியா எம். பி. தந்தி

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போ நிர்வாகம் மிகவும் கேவலமாக இருப்பதாவும் இந்த டிப்போவினுல் செய்யப்படவேண்டிய ஆறு போக்குவரத்து சேவைகள் பல நாட்களாக நடைபெருதிருப்பதாகவும் இதனல் தூரஇடங்களுக்கு போக்குவரத்துச் செய்யவேண்டிய பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் இ. போ. ச. தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியில் தெரிவித்துள்ளார்.

இந்த டிப்போவில் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த பழுதடைந்தபஸ்கள் திருத்துவதற்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு பல நாட்களாகியும் இன்னும் அவைபழுதுபார்க்கப்பட்டு திருப்பி அனுப்பப்படவில்லையெனவும் தெரிவித்துள்ள எம். பி. முல்லைத்தீவு டிப்போவின் நிலைமையை நேரில் வந்து பார்க்குமாறு இ. போ. ச. தலைவரைக் கேட்டுள்ளார்.

தேசியமய சேவைகள் அமைச்சுக்கும் இதுசம்பந்தமாக எம். பி. தந்தி அனுப்பி வைத்துள்ளார்.

### வெளியிடங்களின்

# தொலைபேசி தொடர்பு சேவை துண்டிப்பு

யாழ்ப்பாணம், புதன்

நேற்று நள்ளிரவிலிருந்து இலங்கை பூராவுமுள்ள தந்திப்பகுதி பரிசோதகர்கள், 'லைன்ஸ்மன்'கள், ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளகால்நாடுபூராவுமுள்ள வெளிஇடத்தொலைபேசித் தொடர்புச் சேவைகளும், வெளி இடத் தந்திச் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் 60 ஊழியர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். யாழ்ப்பாணம், கொழும்பு தொலைபேசித் சேவைபழுதடைந்ருப்பதால் இதனைத் திருத்தி சேவையைச் சீரமைக்கத் தற்காலிக ஊழியர்கள் நேற்று மாலை வேலைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் தந்திப் பகுதி பிரதம பொறியியல் நிபுணரும் தந்திப்பகுதி நுட்பத்தொழிலாளர்களும் நேற்று வழமை போல் வேலைக்கு வந்தனர். தபால் சேவை வழமை போலஇங்கு நேற்று நடைபெற்ற போதும் தந்திச் சேவையில் சிறிது சுணக்கமிருந்ததாகத் தெரிகின்றது.

பழுதடைந்திருக்கும் யாழ்ப்பாணம் —கொழும்பு தொலைபேசிச் சேவையை வவனியா வரை பழுது பார்க்க யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து தந்திப்பகுதி, நுட்பத் தொழிலாளர்கள் வாகன வசதி கோரியுள்ளதாகவும் தெரிகின்றது. [ந. நி.]

## ரூபாய்.........

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

எதிர்க்கட்சிகளின் விமர்சனத்துக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

முன்னைய அரசாங்கமும் இதே மாதிரி அந்த இரண்டு உலக நிதி ஸ்தாபனங்களிடமிருந்தும் ஆலோசனை பெற்றிருக்கிறது எனக்குறிப்பிட்ட திரு. யு. பி. வன்னிநாயக்க, இப்போது அப்படி இந்த அரசாங்கம் ஆலோசனை பெறுவதை எதிர்க்கட்சிகள் எதிர்ப்பது மக்களைத் தவருன பாதையில் கொண்டு செலுத்துவதற்காகும் என்ருர்.

## 1000 பொலிஸார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர் மாநகர மண்டபத்திலும் பொதுவரவேற்பொன்றும் அளிக்கப்படும். தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டபின்னர் பிரதமர் உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்வது இதுவே முதல்தடவையாகும். [ந. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org